Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

புலமைப்பரிசில் திட்டம் 2004 ற்கான விண்ணப்ப முடிவு திகதி அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க **30.11.2003** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விணணபபப படிவஙகளினை IIS அலுவலகஙகளிலும் குடா நாட்டின் அனைததுப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொளளலாம.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 31 (26.11.2003) புதன்கிழமை இதழ் :57



நேற்று ஆரம்பமான மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் நினைவுச் சுடரை ஏற்றுகிறார்.

# தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள்!

## தேசியக் கொடியேற்றலுடன் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தாயக விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் எழுச்சி நிகழ்வுகள் நேற்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின.

அனைத்து துயிலும் இல்லங்களிலும் ஒரே நேரத்தில் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டன. தொடர்ந்து ஈகச்சுடரேற்றல், மலர் வணக்கம், அகவணக்கம், நினைவுரை என்பன இடம் பெற்றன.

தமிழீழ மாவீரர் நாளின் ஆரம்பநாள் நிகழ்வுகள் - நேற்றுக் காலை 8 மணிக்கு பளை களமுனையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில், பொதுச்சுடரினை பளை களமுனைத் தளபதி முகுந்தன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை பயிற்சி ஆசிரியர் திலீப் ஏற்றிவைத்தார்.

மாவீரர்களின் திருவுருவப் படத்திற்கு சுடர் ஏற்றிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மலர் மாலையை பளை கட்டளை பணியக நிர்வாகப் பொறுப்பாளர் மகேஸ், மாலதி படையணி போராளி சுகந்தி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று பிரபாவைச் சந்திக்கவிருக்கும் கிறிஸ் பற்றனின் கொடும்பாவி எரிப்பு!

## கொழும்பில் ஜே.வி.பி., சுதந்திரக்கட்சி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

**ஐரோப்பிய யூனியன் ஆணையாளர் கிறிஸ் பற்றன் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்திக்கக்கூடாதெனக் கோரி, அவர் தங்கியிருந்த கொழும்பு ஹில்டன் ஹோட்டலுக்கு முன்பாக தேசிய எதிர்ப்பு முன்னணியினரால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.**

நேற்றுக்காலை 11மணிக்கு நடத்தப்பட்ட இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கிறிஸ்பற்றனின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

தேசிய எதிர்ப்பு முன்னணியில் பொதுஜன முன்னணி, ஜே.வி.பி. ஆகிய க்ட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச மற்றும் முன்னாள் இலங்கை கிரிக்கெட் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பற்றனுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசம் எழுப்பியிருந்தனர். அத்துடன் ஜனாதிபதி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோரிடம் பற்றனுக்கு கிளிநொச்சிக்கு செல்வதற்கான அனுமதியைக் கொடுத்தது யார் என கேட்கவிருப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இவரது இந்த விஜயத்தினை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது எமது இறைமையுள்ள நாட்டிற்கு மிகப் பெரிய அவமானமாகும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கிறிஸ் பற்றன் தங்கியிருந்த ஹில்டன் ஹோட்டலைச் சுற்றி விசேட அதிரடிப்படைப் பொலிஸார் தீவிர பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு

# ஆர்ப்பாட்டம் செய்தவர்கள்

நேற்றுக்காலை 11மணிக்கு நடத்தப்பட்ட இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கிறிஸ்பற்றனின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

தேசிய எதிர்ப்பு முன்னணியில் பொதுஜன முன்னணி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச மற்றும் முன்னாள் இலங்கை கிரிக்கெட் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பற்றனுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசம் எழுப்பியிருந்தனர். அத்துடன் ஜனாதிபதி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோரிடம் பற்றனுக்கு கிளிநொச்சிக்கு செல்வதற்கான அனுமதியைக் கொடுத்தது யார் என கேட்கவிருப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இவரது இந்த விஜயத்தினை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது எமது இறைமையுள்ள நாட்டிற்கு மிகப் பெரிய அவமானமாகும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கிறிஸ் பற்றன் தங்கியிருந்த ஹில்டன் ஹோட்டலைச் சுற்றி விசேட அதிரடிப்படைப் பொலிஸார் தீவிர பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

(1[illegible] ஆம் பக்கம் பார்க்க)



# யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு மேலதிக கண்காணிப்பாளர்கள்

## கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதை முன்னிட்டு யாழ்.குடாநாட்டுக்கு மேலதிக போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகர்டோட்ரயர் கொழும்பில் இது குறித்துத் தெரிவிக்கையில்,

படையினரும் விடுதலைப் புலிகளும் விடுத்த வேண்டுகோளை அடுத்து குடாநாட்டுக்கு மேலதிக கண்காணிப்பாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர். (1[illegible] ஆம் பக்கம் பார்க்க)

## அகவை நூறு காணும் பேறு பெறுக தலைவன்!



வெங்கலக் குரலோன் ; யாரும்
வீஞ்சிடா விறலோன் ; தலைவன்
மங்கள முகத்தோன் ; தமிழன்
மணிமுடி தரித்த முதலோன்.
வாழ்கவே தலைவன் இன்னும்
வல்லமை பெறுக। எங்கும்
சூழ்கவே இன்பம் மண்ணில்
சுதந்திர தீபம் சுடர்க। **வேலணையூர் சுரேஷ்**

# ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மிகச் சிலரே; எரித்த கொடும்பாவி அழகாக இருந்தது!

## பி.பி.சி. பேட்டியில் கிறிஸ் பற்றன் தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்கக் கூடாது என்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது குறித்து கவலைகொள்ளவில்லை. இந்த ஆர்ப்பாட்டத்தில் குறைந்தளவானோரே பங்குபற்றியிருந்தனர்.

எங்கும் அமைதி வழிமுறையை எதிர்ப்பவர்கள் இருக்கவே செய்கிறார்கள். இவர்கள் எரித்த கொடும்பாவியின் உருவம் சற்று அழகாகவே இருந்தது. அதற்காக அவர்களுக்கு நன்றி கூறுகிறேன் என்று ஐரோப்பிய வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் சந்தித்த அரசியல் தலைவர்கள் அனைவருமே வடபகுதி சென்று விடுதலைப் புலிகளின் தலைவரைச் (10 ஆம் பக்கம பார்க்க)

# குடாநாட்டில் மாவீரர் நிகழ்வுகளை படையினர் குழப்ப மாட்டார்களாம்!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் மாவீரர் தினத்தினை அனுஷ்டிப்பதற்கு படையினர் எந்த இடையூறுகளையும் ஏற்படுத்தமாட்டார்கள் என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

மாவீரர் தின நிகழ்வு தொடர்பாக படையினர் மேற்கொண்டுவரும் நெருக்கடிகள் குறித்து நேற்று யாழ்.மாவட்ட கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இராணுவத்தினருக்கும் - விடுதலைப் புலிகள் தரப்புக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காலை 10 மணிக்கு ஆரம்பமாகி இரண்டு மணிநேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது இராணுவத் தரப்பில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா, பிரதிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் இரட்ணசபாபதி மற்றும் படை அதிகாரிகள், விடுதலைப் புலிகள் தரப்பில் யாழ். மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் தலைமையிலான குழுவினரும் ,பொலிஸ் தரப்பில் உதவிப் பொலிஸ்(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெயலலிதாவுக்கு ரணில் வாழ்த்து!

(கொழும்பு)

டான்சி நில பேர ஊழல் வழக்கிலிருந்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா விடுவிக்கப்பட்டதற்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி மூலம் நேற்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் தொடர்பு கொண்டு பேசியபோதே, பிரதமர் ரணில் இந்த வாழ்த்தைத் தெரிவித்தார்.

டான்சி நில பேரத்தில் ஊழல் இடம்பெற்றதாகவும் இதில் ஜெயலலிதா சம்பந்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லாததால் அவர் விடுவிக்கப்பட்டதாகவும் இந்திய உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.








மட்டு - தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுக்காலை மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வு ஆரம்ப வைபவத்தில் கலந்துகொள்ள வந்த புலிகளின் தளபதிகளை முதற்படத்திலும், துயிலுமில்லத்தை தளபதி கேணல் கருணா பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும், துயிலுமில்ல முகப்பு வாசலை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்தில் இன்று மாவீரர் நிகழ்வு

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் நடாத்தும் மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வு - இன்று பிற்பகல் 3 மணிக்கு உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் தலைவர் வெ.தர்மகுல சிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா பிரதம விருந்தினராகவும், வடமராட்சி தேசிய எழுச்சி பேரவைச் செயலாளர் துரை சத்தியசீலன், புலோலி பிரதேசசபை முன்னாள் செயலாளர் எஸ்.செல்வந்திநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வுள்ளனர். (116)

## நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு புதிய மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத்தேர்வு - அடுத்த மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நேர்முகத்தேர்வு, யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலேயே இடம்பெறவுள்ளது.

சகல பாடநெறிகளுக்கும் விண்ணப்பங்களை அனுப்பிய மாணவர்கள் தமக்குரிய தகைமைச் சான்றிதழுடன் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றுமாறு தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் கேட்டுள்ளார். (ப)

## கோழி வளர்ப்பு தொடர்பான பயிற்சி வகுப்பு

கரவெட்டி கால்நடை வைத்திய சாலையில், கோழி வளர்ப்பு தொடர்பான பயிற்சி வகுப்பு இன்று காலை 9 மணி முதல் மாலை 2 மணி வரை கரவெட்டி கால்நடை வைத்தியசாலையில் இடம்பெறும்.

இந்தப் பயிற்சி வகுப்பில் கரவெட்டி கால்நடை வைத்தியசாலை எல்லைக்குட்பட்ட கோழிப்பண்ணை வைத்திருப்போரையும், கோழிப் பண்ணை ஆரம்பிக்க ஆர்வம் உள்ளோரையும் கலந்துகொள்ளுமாறு, கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி திருமதி. சறோசினிதேவி அறிவித்துள்ளார். (116)

## நமது ஈழநாடு நடத்திய தரம் ஐந்து மாணவர்களின் மாதிரிப் பரீட்சை பெறுபேறுகள்

| பெயர் விபரம் | மொத்த புள்ளிகள் |
|---|---|
| யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி<br>298. ச.அபினயா | 108 |
| யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்<br>299. ஜெ.மதிவதனி | 100 |
| யா/ ஊர்காவ. புனித மரி. பெண்கள் பாடசாலை<br>300. ஜே.வாணிப்பிரியா | 100 |
| யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம்<br>301. க.கவிதா | 100 |

(முற்றும்)

## தமிழீழ தேசியத் தலைவரை வாழ்த்தி இன்று சிறப்பு வழிபாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்கள் சுதந்திரமாகவும், சுயநிர்ணய உரிமையுடனும் வாழ வேண்டி, மாபெரும் தியாகங்களைப் புரிந்து, அயராது தீரமுடன் போராடி வரும் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் நலமாக வாழ்ந்து, தேச விடுதலையைப் பெற்றுத்தரவேண்டி - நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ள சிறப்பு வழிபாட்டிலும், ருத்திராபிஷேகத்திலும் சகல ப.நோ.கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், இயக்குநர்கள், பொதுமுகாமையாளர்கள், பணியாளர்கள் மற்றும் தமிழீழ மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு, யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## மாவீரர்களின் நினைவாக விளையாட்டு நிகழ்வுகள்!

(நெல்லியடி)

தமிழீழ விளையாட்டுத் துறை யாழ். மாவட்ட பிரிவின் ஆதரவில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக் நடாத்தும் மாவீரர் நினைவாக நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

15 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான 8 கி.மீ மரதன் ஓட்டப் போட்டி, பாடசாலை மாணவர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு 15 கி.மீ மரதன் ஓட்டப் போட்டி 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான மெதுவாக துவிச்சக்கரவண்டி செலுத்துதல் போட்டி, மெதுவாக மோட்டார் சைக்கிள் செலுத்துதல் போன்ற போட்டிகள் இடம்பெறவுள்ளதென வடமர்ாட்சி உதைபந்தாட்ட லீக் தெரிவித்துள்ளது. (116)

## சைக்கிள் திருடன் தப்பியோட்டம்

தனியார் கல்வி நிலையமொன்றின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளைத் திருடமுயன்றவரைப் பொதுமக்கள் பிடிக்க முயன்றபோதும், சைக்கிளைப் போட்டுவிட்டு திருடன் அவ்விடத்திலிருந்து தப்பியோடிய சம்பவமொன்று, நேற்றுப் பிற்பகல் யாழ்.நகரப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது-

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில், யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள பிரபல தனியார் கல்வி நிலையம் ஒன்றின் முன்னால் நின்ற புதிய சைக்கிள் ஒன்றின் பூட்டினை அவன் உடைக்கமுயன்றுள்ளான். இதனை அவதானித்த பொது மகன் ஒருவர் அவரை அணுகியபோது - தப்பியோட முயன்றுள்ளான். எனினும், சில பொதுமக்கள் சேர்ந்து திருடனை விரட்டியபோதிலும், திருடன் தப்பி விட்டதாகத் தெரியவருகிறது.

இந்தப் பகுதியில் அடிக்கடி சைக்கிள் திருட்டுக்கள் இடம்பெறுவதாகவும் தெரியவருகிறது. (ப)


49 ஆவது பிறந்ததின வாழ்த்துக்கள்



தமிழினத்தின் தன்னிகரில்லா தேசியத்தலைவன்
தமிழ்த்தாயின் தனிப்பெரும் சேனைத் தலைவன்
தமிழ் மண்ணின் துயர்தீர்க்கும் தங்கத் தலைவன்

எம் தலைவன் 49 ஆவது அகவை காண்பதில் பெருமகிழ்ச்சி அடைவதுடன் எம் இனிய தலைவனை வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

ரம்யா நகைமாடம்
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

V.S.M. களஞ்சியம்
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

சுஜவதனன் பாதணியகம்
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

குலம் கிறீம் ஹவுஸ்
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

மயூரா தச்சுத் தொழிலகம்
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

வலி. தென்மேற்கு
பிரதேச முச்சக்கரவண்டி
உரிமையாளர்
சங்கம்

ராஜன் சுப்பர் மார்க்கட்
பிரதான வீதி,
மானிப்பாய்.

(சி-1827)

மானிப்பாய் பனை தென்னை வள
அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்
பிரதான வீதி,
மானிப்பாய்.

சாயி தொலைத்தொடர்பு நிலையம்
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.



தேவை

கொக்குவிலில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு ஓரளவு ஆங்கில அறிவு உள்ள பெண் தேவை. அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விளம்பர இல - 1839
c/o நமது ஈழநாடு,
267, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.
(சி-1839)

நிறஞ்சனாஸ் சங்கானை
சிவாஜி, அர்ஜீன் நடித்த
மன்னவரு சின்னவரு
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
Get Carder

ராஜா யாழ்ப்பாணம்.
லக்கிஸ்ரார் அஜித், மீராஜஸ்மின், கபாலி நடித்த
ஆஞ்சநேயா
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-1751)

# தமிழீழத் தேசியத் தலைவரின் 49 ஆவது பிறந்த நாள் இன்று...

ஒரு கெரில்லா இயக்கத்தின் தலைவனாக தமிழீழ தேச விடுதலைப் போராட்டத்திற்குள் காலடி எடுத்துவைத்த, தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இன்று வியட்னாமிய தலைவர் கோச் சிமின் போல, லிபியத் தலைவர் கடாபி போல கியூபா தலைவர் பிடல் கஸ்ரோவைப் போல தமிழ் மக்களுக்கு ஒரு புரட்சிகர தலைமையை வழங்கி சர்வதேச தலைவர்கள் வரிசையில் மிக இளம் வயதிலேயே இடம்பிடித்துக்கொண்டுள்ளார்.

ஈழத்தில் தேசியத் தலைவரால் தொடக்கிவைக்கப்பட்ட விடுதலைப் போராட்டம்- கடந்த இரு தசாப்தகாலத்தில் பெரு வெற்றிகளையும், பெரும் சாதனைகளையும் பெற்றுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினை இன்று சர்வதேச மயமாக் கப்பட்டுள்ளது. இந்த இமாலய வெற்றிக்குப் பின்புலமாக அமைந்த- கடந்தகால அவரின் அரசியல் இராணுவ இராஜதந்திர நகர்வுகள் உலகின் கவனத்தை பெருமளவில் ஈர்த்துள்ளன.

### விடுதலைப் புலிகள் உதயம்

1972 ஆம் ஆண்டு சில தமிழ் இன உணர்வு கொண்ட இளைஞர்களைத் தம்மோடு இணைத்துக்கொண்டு- புதிய தமிழ்ப்புலிகள் என்ற அமைப்பை உருவாக்கிய தேசியத் தலைவர் - 1976 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம்திகதி இராணுவ, அரசியல், பரிமாணங்களை உள்ளடக்கியதான முறையில் - தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற அமைப்பாக அதனை மாற்றி பெயர்ப்பிரகடனம் செய்தார்.

இந்த அமைப்பிற்குரிய சின்னத்தை அவர் தெரிவுசெய்த போது, தமிழர்களின் நீண்டகாலப் பாரம்பரியம், வரலாறு,



அமைப்பின் பிழையான நெறிப்படுத்தலின் விளைவாக, அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி- ஜே.ஆருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து, இந்தியப் படைகளை இலங்கைக் குள் இறக்கினார். இந்தியப் படைகள் தமிழ்ப்பிரதேசத்தில் இனப்படுகொலைகளை மேற்கொண்டன. விடுதலைப் புலிகளைச் சீண்டி சண்டைக்கு இழுத்தன. பல தியாகங்களால் கட்டி வளர்க்கப்பட்ட விடுதலைப் போரை முற்றாக அழித்துவிட இந்தியா கங்கணங்கட்டிநின்றது. இந்த நிலையில் போராட்

வடிக்கை முறியடிப்புச்சமர்மூலம் தேசியத் தலைவர் பிரபாகரனின் நெறிப்படுத்தலில் விடுதலைப் புலிகள் ஆறு நாட்களில் கைப்பற்றினார்கள். இதில் 2000 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரப் பகுதியான குடாரப்புவில் தரையிறக்கப்பட்ட போராளிகள் பெற்ற வெற்றி, சர்வதேச இராணுவ, விஞ்ஞான ஆய்வாளர்களையே பெரும் வியப்பிலும், குழப்பத்திலும் ஆழ்த்தியது. தேசியத் தலைவரின் இராணுவ, விஞ்ஞான அறிவின் முதிர்ச்சியும் - விடுதலைப் புலிகளின் இராணுவரீதியான வெற்றியின் உச்சமாகவும் இது வரலாற்றுச் சிறப்புப் பெற்றுள்ளது.

### தேசியத் தலைவரின் அரசியல் வெற்றி

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி இலங்கையில் ஏற்பட்ட ஒரு பொதுத் தேர்தலில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இதற்கு முன்னோடியாக, 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தேசியத் தலைவர் ஆற்றிய மாவீரர்தின உரையில் - போரா? சமாதானமா? என்பதைத் தீர்மானிக்கச் சிங்கள மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது எனக்குறிப்பிட்டார். மக்கள் பொதுத் தேர்தலில் சமாதானத்திற்கு வாக்களித்தார்கள். ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். இதைத்தொடர்ந்து அவர் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்தானது.

2002 செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதி விடுதலைப் புலிகள்மீதான தடை நீக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி தாய்லாந்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

வே.பிரபாகரனின் மிகச்சாதுரியமான இம்மூன்று செயற்பாடு

# தென்னாசிய பிராந்தியத்தில் வே.பிரபாகரன் ஒரு புயலின் மையம்

வீரம் என்பவற்றை பிரதிவிம்பப்படுத்தக்கூடிய வகையில் அதனை வடிவமைத்தார்.

### ஈழத் தேசிய விடுதலை முன்னணியுடன் இணைதல்

1984 ஆம் ஆண்டு சென்னையில் - ஈரோஸ்,ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய மூன்று அமைப்புக்களும் இணைந்து, ஈழத்தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்புடன் விடுதலைப் புலிகள் அமைப்பு இணைவதா இல்லையா என்பது தொடர்பாக பல வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டன. அக்கால அரசியல் சூழ்நிலைகளை கருத்திலெடுத்து பிரபாகரன் தமிழ் மக்களின் எதிர்கால நலன்கருதி, இந்த அமைப்புடன் இணைவதா என்று ஒரு முடிவினை எடுத்தார்.தமிழ் மக்களது விடுதலைப் போருக்கு மேலும் வலுச்சேர்த்த இந்த நடவடிக்கையானது, தேசியத் தலைவரின் அரசியல் சாணக்கியத்தினை அற்புதமாக எடுத்துக் காட்டுகின்றது. மிகச்சிறந்த தீர்க்கதரிசனம் மிக்க இந்தமுடிவினால், 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி சென்னையில் இந்த அமைப்பில் விடுதலைப்புலிகள் அமைப்பும் இணைந்தது. இலங்கைத் தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் இது ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

1985 ஆம் ஆண்டு பூட்டானின் தலைநகரான திம்புவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய இந்த அமைப்பு தமிழ்மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கையாக நான்கு விடயங்களை அடையாளப்படுத்தி பேச்சுவார்த்தை மேசையில் முன்வைத்தது. இதுவே இன்று திம்புக்கோட்பாடுகள் என அழைக்கப்படுகின்றது. தமிழ்மக்களின் அடிப்படை அபிலாஷைகளை அது வெளிப்படுத்துகின்றது. மறுக்கப்பட முடியாத தமிழர்களின் உரிமைச்சாசனமாக அது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது தேசியத்தலைவரின் அரசியல் ரீதியான வெற்றிக்கு கட்டியம் கூறுகிறது.

### இந்தியா - புலிகள் தற்காப்பு யுத்தம்

1987 ஆம் ஆண்டு இந்திய உளவுஸ்தாபனமான 'றோ' டத்தைப் பாதுகாக்க தற்காப்பு யுத்தம் ஒன்றை மேற்கொள்வதைத்தவிர, வேறு வழியில்லை என்ற நிலையில் புலிகள்- இந்தியப் போர் 1987 ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகியது.

விடுதலைப் புலிகளின் ஆயுத பலத்தையும், ஆட்பலத்தையும் கணக்கில் எடுத்த இந்தியா - அவர்களது ஆத்ம பலத்தையும் மக்கள் ஆதரவையும் கணக்கில் எடுக்கத்தவறியமையால் புலிகளிடம் இந்தியா தோற்றுப்போனது. வெள்ளைக்கொடியோடு வந்த சமாதானப்படை, இரத்தக்கறைபடிந்த சிவப்புக் கொடியோடு இலங்கையைவிட்டு வெளியேறியது. விடுதலைப் புலிகளை வழிநடத்திய வே.பிரபாகரன் போற்றப்பட்டார். போராட்டம் பாதுகாக்கப்பட்டது. அவரின் துணிச்சலான முடிவுகள் தூர நோக்குடையவையாகக் கணிப்பீடு செய்யப்பட்டன.

### தேசியத் தலைவர் புயலின் மையம்

பிரபாகரன் எண்பதுகளில் ஒரு கெரில்லா இயக்கத் தலைவர். தொண்ணூறுகளில் அவர் அரை மரபுவழிச் சமர்களுக்கு தலைமை தாங்கிய ஒரு தளபதி. இப்போதுள்ள புத்தாயிரமாம் ஆண்டில் அவர் முழு மரபுவழிச் சமர்களின் பாட்டுடைத் தலைவன். கடந்த இரு தசாப்தத்தில் தென்னாசியப் பிராந்தியத்தில் ஒரு விடுதலைப்போரை மிக அவதானமாக வியூகம் அமைத்து, வழிநடத்தும் புயலின் மையமாக அவர் விளங்குகின்றார்.

இரண்டாம் உலகப்போரின்போது, ஒரு நீண்டகாலப் படையெடுப்பாக 'ஒப்பறேசன் பாபரோசா' கருதப்படுகின்றது. இதன்பின் நீண்டகாலப் படையெடுப்பாக 1997 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேசன் ஜெயசிக்குறு' கருதப்படுகின்றது. 18 மாதகாலம் இடம்பெற்ற இந்த இராணுவ நடவடிக்கை, 1998 டிசெம்பர் மாதம் 04 ஆம் திகதி கைவிடப்பட்டது. இந்த நீண்டகாலத்தில் கைப்பற்றப்பட்ட இடங்கள், 1999 நவம்பர் மாதம் 2 ஆம் திகதி தொடங்கப்பட்ட 'ஓயாத அலைகள் 3' நட

களும் -அரசியல் ரீதியாக பெற்ற பெரும்வெற்றி என்பதோடு, அவரது அரசியல் சாணக்கியத்தின் உச்ச வெளிப்பாட்டையும் அது வெளியரங்கப்படுத்தியது.

### ரோக்கியோ மாநாடு

தாய்லாந்து பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக ஆறு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன. இந்தநிலையில் ரோக்கியோவில் உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் இடம்பெற்றது. 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு, விடுதலைப் புலிகளையும் பங்குபெறச்செய்ய சர்வதேச சமூகம் படாதபாடுபட்டது. விடுதலைப் புலிகளின் உதவியைப் பெற்று, வடக்கு - கிழக்கை அபிவிருத்திசெய்ய ஒரு அதிகார அமைப்பை வேண்டிநின்றார். ரோக்கியோ மாநாட்டை புறக்கணித்தார். அதிகார அமைப்பின் அவசியத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டது.

இதன் அடிப்படையில்- இடைக்கால திட்டவரைபு தயாரிக்கப்பட்டது. ஆனால், அண்மைக்காலத்தில் சந்திரிகாவின் அதிரடி நடவடிக்கையால் தென்னிலங்கையின் அரசியல் குழம்பியது. ஜப்பான் உட்பட உதவி வழங்கும்நாடுகள் தமது உதவிகளை இடைநிறுத்தியுள்ளன. பிரபாகரனின் இராஜதந்திர நடவடிக்கைளின் உச்சக்கட்டமாக, இன்று ரோக்கியோ மாநாட்டை விடுதலைப் புலிகள் பகிஷ்கரித்தமை கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தேசியத்தலைவர் இன்று சர்வதேச அரசியலில் ஒரு கெரில்லா இயக்கத்தின் தலைவனாக, தளபதியாக, அரசியல் விற்பன்னராக, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு விடுதலை இயக்கத்தின் தலைசிறந்த நிர்வாகியாக, தூர நோக்குடைய இராஜதந்திர கணிப்புக்குரியவராக, ஒரு புயலின் மையமாக, தென்னாசிய பிராந்தியத்தில் இன்று இடம்பிடித்துள்ளார் என்பதில் தமிழினம் பெருமை கொள்கின்றது.

**பொன்.பூலோகசிங்கம்.**



## தலைவன் ஒரு (அவ) தாரம்

பனியென எழுபகை பரிதியெந் தலைமகன்
பார்வையில் மறைந்து விடும்- வாழ்வில்
இனியொரு பயமில்லை என்பவர் நம்பிட
இனியவன் விழி இருக்கும்
தனிவழி போகிலும் தலைவனின் நாமமும்
துணையெனக் கூடி வரும்- தமிழ்
குனிவது இனியிலைக் கோன்முறை தந்தவன்
கனிமொழி காவல் தரும்.

செந்தமிழ்க் காவலன் செம்மொழி வாங்கிடச்
சந்த மும்புவி ஏங்கும்- எழில்
சுந்தர வாழ்வியல் சொந்தமண் ஈதென
இந்நில உள்ளமும் ஓங்கும்
நொந்துயிர் வாழ்பவர் நந்துயர் என்றவன்
தந்தனன் செந்தமிழ் வாழ்வு -நிதம்
வந்தனை செய்தவன் வாழ்வுமே செழிக்கவே
தந்தனன் உள்ளம் வாழி

அழைப்பவர் குரலது ஓயுமுன் அவரயல்
இருப்பவன் எந்தமிழ்க் கண்ணன் - உடல்
உழைப்பவர் வியர்வை உலருமுன் கூலி
ஈய்பவன் அருந் தலைவன்
இளைப்பவர் துன்பம் எவ்வள வாகிலும்
ஏந்துவன் எங்கள் தேவன் - நாம்
தழைத்திட நாளும் தவத்திடை வாழும்
திருவுருவம் திருந்தனம் வாழ!

சேரன்-த.சிவராசா

## ஆண்டுகள் பல வாழ்க எம் தலைவன்

தமிழ்த் தாயின் தலை மகன்
தாய் நாட்டின் திரு மகன்
பார் போற்றும் பெரு வீரன்
தமிழினம் வாழ்த்தும் புலிவீரன்
தடைகளை உடைத்திட்ட புலியே நீ வாழி
தமிழரை உயர்த்திட்ட தலைவா நீ வாழி
வீணரை அழித்திட்ட வேங்கையே நீ வாழி
விடிகின்ற தேசத்தின் ஒளியே நீ வாழி
எல்லையில்லா வானமதன் தூரம் இவன் வீரம்
ஆழம் காண ஆழியதன் ஆழம் இவன் உள்ளம்
நீண்ட பெரும் சமுத்திரத்தின் நீளம் இவன் பாசம்
இன்னல் என்று வந்துவிட்டால் குமுறும் இவன் நெஞ்சம்
மக்களைப் புலியாக மாற்றிட்ட தலைவன்
பகைவனை அழித்திட்ட தலைவன் எம் தலைவன்
வெற்றிமேல் வெற்றியைக் குவித்திட்ட தலைவன்
சமாதானப் பாதைதனை காட்டிட்ட தலைவன்
தமிழ் மக்கள் இன்றுந்தன் அணியிலே தலைவா
தாயகக் கனவெங்கள் மனங்களில் தலைவா
சமாதானத் தீர்வென்றால் வரவேற்போம் தலைவா
இல்லைப் போராடி ஈழத்தைப் பெறுவோம் நாம் தலைவா
இன்று தனது 49 வது அகவையினை நிறைவு
செய்யும் எம் தலைவனை ஆண்டுகள் பல நலமுடன் வாழ்ந்து
சுதந்திர ஈழத்தில் எம் மக்களை செம்மையுடன்
வழி நடத்த வேண்டும் என வாழ்த்துகின்றோம்.



எஸ்.றொய்லின்

# மாணவர் பேரவை அலுவலகத்தை தாக்கியமை ஜனநாயகத்துக்கு விரோதமான செயலாகும்

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்துக்குள், பொலிஸார் முன் அனுமதியின்றி உட்புகுந்து, தகாதசெயலில் ஈடுபட்டதை - யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழர்களின் சுதந்திரமான வாழ்வுக்காகக் குரல் கொடுத்துவரும் சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை அலுவலகத்துக்குள், அதிகாலை ஒரு மணியளவில் நீதிமன்ற அனுமதியோ அல்லது முன் அனுமதியோ இல்லாமல், வாசற்கதவுகளை உடைத்து உட்புகுந்து, அங்கிருந்த பேரவை உறுப்பினர்களைத் தாக்கியும், முக்கிய ஆவணங்களை எடுத்தும் சென்ற பொலிஸாரின் செயல் - அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

ஜனநாயகரீதியாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்துவரும் பேரவை உறுப்பினர்கள் மீது - பொலிஸார் கண்மூடித்தனமாக நடந்துகொண்டிருப்பது - ஜனநாயக விரோதச்செயலாகும். இதனை நாகரிகமுள்ள மனிதசமூகத்தால் ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்தச் செயல்கள் - மாவீரர் நாள் செயற்பாடுகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடியது. இதனை தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

தமிழ் மக்களின் நீதியான போராட்டத்தை, ஆயுதமுனையில் அடக்கப் பொலிஸார் முற்படுவார்களானால் - அது பெரும் எதிர் விளைவைத்தரும் எனச் சுட்டிக்காட்டுகின்றோம் . இது போன்ற செயலைப் பொலிஸார் கைவிட வேண்டுமென - பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

# ஒரு லட்சத்து 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு அடுத்த மாத இறுதியில் பதவி உயர்வு!

இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ள 1 லட்சத்து 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு, அடுத்த மாதம் 31 ஆம் திகதியிலிருந்து பதவியுயர்வு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆசிரியர் சேவையிலுள்ள இந்த ஆசிரியர்களுக்கு, பதவியுயர்வு வழங்குவதற்காக, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு - அமைச்சரவையில் சமர்ப்பித்த பிரேரணைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆசிரியர் சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு, உரிய தராதரங்களை அடிப்படையாக வைத்து, அவர்களுக்கான பதவியுயர்வை வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான சுற்றுநிருபம் - இந்த வார இறுதிக்குள் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

# யாழ்ப்பாண இளைஞர்களுக்கான தகவல் விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் மன்றமும், சமூகசெயற்பாட்டு மையமும் இணைந்து - இளைஞர்களுக்கான தகவல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்திவருகின்றன.

பிரதேச செயலர்ரீதியாக இடம்பெற்று வரும் இந்தக் கருத்தரங்குகளில், யாழ்.பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்களுக்கான கருத்தரங்குகள், கடந்த வாரம் நிறைவடைந்துள்ளன.

தொடர்ந்தும் யாழ்.மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கான கருத்தரங்குகள், தொடர்ந்தும் இடம்பெறவுள்ளன.

வீட்டுப்பொருளாதாரம், எய்ட்ஸ் நோய், அடிப்படை மனித உரிமைகள், குடும்ப சுகாதாரம், முதலுதவிகள், சமாதானக் கல்வி, சூழல் பாதுகாப்பு, தலைமைத்துவம் முதலான விடயங்கள் குறித்து இந்தக் கருத்தரங்குகளில் ஆராயப்படவுள்ளன. (ப)

# ஆறுமுக நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு பேச்சுப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரங்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை தினத்தை முன்னிட்டு, சைவ பரிபாலனசபை பேச்சுப்போட்டி ஒன்றை நடாத்தியது. இந்தப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவர்களுக்குத் - தங்கப்பதக்கமும், இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு - வெள்ளிப்பதக்கமும், மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு - வெண்கலப் பதக்கமும் வழங்கப்படவுள்ளன.

மூன்று பிரிவுகளிலும் முதல் மூன்று இடத்தைப் பெற்றவர்களுக்கு, அடுத்த மாதம் 14 ஆம் திகதி நடைபெறும் குருபூசை தினத்தன்று பரிசில்கள் வழங்கப்படும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு-

**கீழ்பிரிவு**

முதலாமிடம் - தெ.சிவரூபன் (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்).

இரண்டாமிடம் - லக்ஸா சுரேந்திரன் (இராமநாதன் கல்லூரி).

மூன்றாமிடம் - தர்சிகா தர்மசேகரம் (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்)

**மத்தியபிரிவு**

முதலாமிடம் - தாரணி செல்வராஜா (கிளி.இராமநாதன் மகா வித்தியாலயம்).

இரண்டாமிடம் - யோகலிங்கம் சுதாகர் (யூனியன் கல்லூரி).

மூன்றாமிடம்: சிந்துஜா முத்துலிங்கம் (பிரான்பற்று கலை மகள் வித்தியாலயம்).

**மேற்பிரிவு**

முதலாமிடம் - சுஜி லோகநாதன் (அருணோதயா கல்லூரி).

இரண்டாமிடம் - கஜனி அருட்பிரகாசம் (உசன் இராமநாதன் வித்தியாலயம்).

மூன்றாமிடம் - ரமா குகநாதன் (வைத்தீஸ்வரா கல்லூரி).



யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற மாவீரர் எழுச்சி நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தேசியக்கொடி ஏற்றுவதைப் படத்தில் காணலாம். (202)

## புலமைப்பரிசில் கருத்தரங்கு

யாழ். கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன், தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கருத்தரங்கு - மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் த.அம்பிகைபாகனால் நடாத்தப்படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு - காலை 9 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறும். இதில் இணைந்துகொள்ள விரும்பும் பாடசாலைகள்- கருத்தரங்கு நடைபெறும் பாடசாலை அதிபருடனும், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவஞானசுந்தரத்துடனும் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இன்று - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையிலும், நாளை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும், வெள்ளிக்கிழமை புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரியிலும், சனிக்கிழமை பொஸ்கோ வித்தியாலயத்திலும் நடைபெறும் கருத்தரங்குகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் - மதிய போசனம், கையேடு, வினாத்தாள் அச்சகக்கூலிக் கட்டணம் 60 ரூபா செலுத்தவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிணற்றில் தவறி வீழ்ந்து முதியவர் பரிதாபமரணம்

முதியவர் ஒருவர் கிணற்றுக்குள் தவறிவிழுந்ததில், பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் உடுவில் - முதலாம் கட்டை ஒழுங்கைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை நல்லம்மா (வயது 78) என்பவரே கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமடைந்தார்.

சம்பவ தினத்தன்று தண்ணீர் அள்ளுவதற்காக - இரவு 10 மணிக்குக் கிணற்றடிக்குச் சென்றவரைக் காணாததினால், கிணற்றடியில் சென்றுபார்த்தபோது, சடலமாக கிணற்றில் மிதப்பதைக் கண்டனர்.

இவருடைய உடல் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது என - யாழ். வைத்திய சாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ம.சாருஜா
முகவரி : வேப்பங்குளம், வவுனியா.

மூன்றாவது அகவையில்



பெயர் : ஜெ.நிவாசன்
முகவரி : பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

எட்டாவது அகவையில்



பெயர் : வி.விதுசன்
முகவரி : கரணவாய் கிழக்கு, கரவெட்டி.



பெயர் : க.அருண்
முகவரி : கொத்தியால், வல்வெட்டித்துறை

ஒன்பதாவது அகவையில்



பெயர் : சி.மெல்கியாஸ்
முகவரி : இல 12, நெடுந்தீவு.

பன்னிரண்டாவது அகவையில்



பெயர் : கு.தயாளன்
முகவரி : மகாத்மா வீதி, நெல்லியடி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்

# மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2003



மாணவர் மலர்

✶பின்வரும் விளம்பரத்தை நன்கு வாசித்து, அதன் கீழுள்ள இல. 1-15 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

> வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது தரம் 5 புலமைப்பரிசில் வழிகாட்டி! தரம் 5 மாணவர்களுக்குப் புதிய பாடத்திட்டத்தின்படி (கல்வியாண்டு, 2003) அண்மையில் வெளிவந்த மிகச்சிறந்த நூல். தரம் 3, 4, 5 ஆசிரியர் கைந்நூலைத் தழுவி எழுதப்பட்டது. தமிழ் மொழி, கணிதம், ஆங்கிலம், இரண்டாவது தேசியமொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், ஆக்கம், அழகியல், உடற்கல்வி சார்ந்த செயற்பாடுகள் போன்ற பாடங்களைத் தழுவி எழுதப்பட்டது. ஆசிரியர் த. அம்பிகைபாகன் B.Ed. தொகையாக எடுப்பவர்களுக்கு 10% கழிவுண்டு. 250 பக்கங்களையும், அழகிய அட்டைப்படத்தையும் கொண்டது. இன்றே நாடுங்கள்! படித்துப் பயனடையுங்கள்! பரீட்சையில் சித்தியடையுங்கள்!
>
> ஏகவிநியோகஸ்தர்கள்:- லங்கா புத்தகசாலை டயஸ்பிளேஸ், குணசிங்கபுர, கொழும்பு - 12. தொலைபேசி 506335

01. இந்த விளம்பரம் எந்தநூலைப் பற்றியது?
02. இந்த நூல் எந்த தரத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு எழுதப்பட்டது?
03. இந்த நூலை எழுதிய ஆசிரியர் யார்?
04. இதன் விலையென்ன?
05. இந்நூல் எத்தனை பக்கங்களைக் கொண்டது?
06. இந்நூலை எங்கு பெற்றுக்கொள்ளலாம்?
07. 'விற்பனையாகின்றது' என்ற சொல் உணர்த்தும் காலம் எது?
08. இந்நூலில் எந்தப் பாடங்களைப் கொண்ட வினாக்கொத்து சேர்க்கப்பட்டுள்ளது?
09. 'கல்வியாண்டு' என்பதைப் பிரித்து எழுதுக?
10. இந்நூலை நன்கு படிப்பவர்கள், எந்தப் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெறலாம்?

**✶ பொருத்தமான எதிர்ச்சொல்லினை எழுதுக.**

11. புதிய ...................... 12. அண்மை ......................

**✶ பொருத்தமான ஒத்த சொல்லினை எழுதுக.**

13. ஆசிரியர்.................. 14. நூல்..................
15. இந்த விளம்பரத்தில் காணப்படும் பெயர்ச்சொற்கள் இரண்டினை எழுதுக.


1............................... 2...............................

**✪ இல. 16 முதல் 20 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும், பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்தில் எழுதுக)**


16. கதிரை .................. 17. வெண்கட்டி ..................
18. ஆசிரியர் ................ 19. சந்தை ....................
20. கிணறு ....................

**✪ இல. 21 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21. ஐயாயிரத்து எண்ணூற்றேழு என்பதை இலக்கத்தில் எழுதுக.
22. 5,3,9,1 ஆகிய இலக்கங்களைக் கொண்டு அமைக்கக்கூடிய மிகப் பெரிய எண் யாது?
23. ....... 4000,......... முன்னுள்ள எண்ணையும் பின்னுள்ள எண்ணையும் எழுதுக.
24. 37 ஐக் குறிக்கும் உரோமன் எண் யாது?
25. பாடசாலை A இல் 4327 மாணவர்களும், பாடசாலை B இல் 2200 மாணவர்களும் உள்ளனர். A இல் B ஐ விட எத்தனை மாணவர்கள் கூடுதலாகவுள்ளனர்?
26. தொழிற்சாலையொன்றில் திங்கட்கிழமை 3840 காலணிகள் உருவாக்கப்பட்டன. எல்லா நாட்களிலும் சமமான காலணிகள் உருவாக்கப்பட்டால், முதல் 5 நாட்களிலும் உருவாக்கப்பட்ட காலணிகள் எத்தனை?
27. பாத்திரமொன்றில் 3*l* 500*ml* குளிர்பானம் உள்ளது. இதனை 4 பிள்ளைகளுக்குச் சமமாகப் பங்கிட்டால், ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் குளிர்பானத்தின் அளவு யாது?
28. மயூரனிடம் 5 m 80 cm நீளமான நாடாவுள்ளது. அவன் 11 மாணவருக்கு 50 cm வீதம் வெட்டிக்கொடுத்தால், மயூரனிடம் மீதியாக உள்ள நாடாவின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர்?
29. இந்தச் செவ்வகத்தின் சுற்றளவு யாது?




30. இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியின் பின்னமென்ன?



✪பின்வரும் பாடலைக் கவனமாகப் படித்து, அதன் கீழுள்ள இல. 31 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

"அன்பை வளர்க்க வேண்டும் - கிளியே
அறிவைப் பெருக்க வேண்டும்
உன்போற் பிறரை எண்ணி - நல்ல
உதவி புரிய வேண்டும்.
அன்னை சொற் கேட்கவேண்டும் - தந்தை
ஆணைக் கிணங்க வேண்டும்
தன்னை வணங்க வேண்டும் - பிறர்
தம்மை மதிக்க வேண்டும்"

31. நாம் எதை வளர்க்கவேண்டும்?
32. யாருடைய சொல்லைக் கேட்கவேண்டும்?
33. யாருடைய ஆணைக்கு இணங்கவேண்டும்?

**✪ பின்வருவனவற்றிற்குப் பொருத்தமான ஒத்தசொல் தருக.**

34. தந்தை
35. அன்னை

**✪ பின்வருவனவற்றிற்குப் பொருத்தமான எதிர்ச்சொல் தருக.**


36. அன்பு 37. பிறர்
38. நாம் எதனை அதிகரிக்கவேண்டும்?
39. நாம் யாரை மதிக்கவேண்டும்?
40. இருமுது குரவர் எனப்படுவோர் யாவர்?
41. ஞானம் என்பதற்கு ஒத்தசொல் பாட்டில் உள்ளது. அந்தச் சொல்லை எழுதுக.

**✪ இல 42 முதல் 51 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) என்ற அடையாளத்தையும் பிழையாயின் (×) என்ற அடையாளத்தையும் கூற்றின் எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள் இடுக.**

42. தமிழ்மொழியில் 247 எழுத்துக்கள் உண்டு. ( )
43. பூமி தட்டை வடிவானது. ( )
44. அல்லும் பகலும் என்பது இரட்டைமொழியாகும். ( )
45. 50 என்பதை உரோம எண்ணில் L என எழுதலாம். ( )
46. ஒவ்வொரு கூற்று வாக்கியத்தின் முடிவிலும் முற்றுப்புள்ளி அவசியமாகும். ( )
47. இந்திய விடுதலைக்காகப் பாடுபடாத பெரியார் மகாத்மாகாந்தி ( )
48. உணவு, உடை, உறைவிடம் என்பன மனிதனின் அடிப்படைத் தேவைகளாகும். ( )
49. நாம் தொலைக்காட்சியில் நல்ல மாணவர் நிகழ்ச்சிகளைப் பார்க்கக்கூடாது. ( )
50. காந்தம் எப்போதும் வடக்கு நோக்கி இருக்கும். ( )
51. மனிதனின் சாதாரண உடல்வெப்பநிலை 98.4 F அன்று ( )

**✪இலக்கம் 52 முதல் 60 வரையுள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

52. இலங்கையின் தேசியப் பறவை
    1. மயில் 2. கோழி 3. புறா 4. காட்டுக்கோழிச் சேவல்
53. தேசிய கீதத்தை இயற்றியவர்
    1. மகாத்மா காந்தி 2. ஆனந்த சமரக்கோன்
    3. பாரதியார் 4. கண்ணதாசன்
54. சொரூபன் ரூபா 2 முத்திரைகளையும், ரூபா 3 முத்திரைகளையும் சம எண்ணிக்கையில் வாங்கினான். இம்முத்திரைகளின் பெறுமதி ரூபா 200 எனின், அவன் வாங்கிய முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
    1. 40 2. 20 3. 80 4. 100
55. இந்த எண்தொடரில் அடுத்து வரவேண்டிய எண்ணிக்கை



1. 12 2. 13 3. 14 4. 15

(5) **Read the paragraphs on how Gerald the football player spends his workdays and what he is doing now. Next Write similar paragraps about Tony and Peggy the farmers.**




**Workday**
spend, ground
train, hard
wear track suit

coach players
practise Kicks

**Now**
not working
has a cool drink
wear bathing suit, sunglasses

relax, beach
listen music

Workday
Gerald is a football coach. Every morning he spends his time at the grounds. He coaches players. He trains them hard and practises Kicks. He wears a track suit when coaching.

Now
At the moment Gerald is not working. He is relaxing at the beach. He is having a cool drink and is listening to music. He is wearing a bathing suit and sunglasses.




**Workday**
get up early
grow vegetables - fruit
wear trousers

Work , farm
raise hens - cows

**Now**
not working
drink, eat
wear party dresses

at friends place
laugh, chat

Workday
.......................................................................................

Now
.......................................................................................

(5 Marks)

(6) Your best friend is going to sit the G.C.E O/L examination in two months' time. He/She is worried and feels upset over the problems he/she has to face -These are some of her/his problems.

- Too much school work.
- Endless extra classes.
- Has to give up sports activities.
- Has to make his/her parents happy.
- write a letter of advice to help her cope with the situation.

Use about 100 words

(5 Marks)

(7) Read the text on 'Coffee' Much each paragraph with the appropriate heading. Write the correct number of the paragraph in the relevant box.

## COFFEE

1. The coffee plant is a small tree. It has dark green leaves and white flowers which produce small red fruits.
2. The drink originated in Arabia and was drunk there before the thirteenth century. During the seventeenth century it spread rapidly and became a popular drink in many coun - tries.
3. It is grown in an area of about 20 degrees on either side of the eqator. It can be grown from sea level to about 2000 metres. It needs an average temperature of about 77 degrees Farenheit.
4. Express coffee is made by forcing steam through specially roasted coffee. In many places chicory is added to give strength and colour. In some countries a cup of coffee takes a long time to prepare.
5. Coffee does not normally have any harmful effects on those who drink it. It can have bad effects however if it is drunk in large quantities. It has a stimulating effect on the central nervous system.

Heading
a. Preparation of the drink ☐
b. Historical development ☐
c. Desecription of the plant ☐
d. Good and bad effects ☐
e. Climatic and geographical factors needed ☐

(5 Marks)

(8) Your school is 50 years next month. You are preparing to ha ve its celebrations on a grand scale. As the head prefect of the school, you have discussed with the other prefects your ideas of how you are going to arrange it. Write a report of your plans to be presented to the principal
Include the following.

- How you would give the school a new look.
- Who will help you.
- How you would collect funds.
- The activities you would have.

(Use about 75 words)

(5 Marks)

## PAPER - II

9) Read the following text. Underline the correctd word that fills blank. The first one has been done for you.

This might be the of high technology in many western (1) .........................(culture, people, <u>coun tries</u>) but for the majority of the world`s children every daylife is still a fight just to (2) .............................(survive, win, settle)In Africa and Asia, ten percent of (3) ........................(men, women, babies) die before they are even one year old. The average life expect- ancy is about 46 years.

One in four, third world children can expect to suffer malnutrition. In (4) ........................ (developing, developed, warm) countries nearly three quarters of the people do not have access to safe water.

Also eighty percent of the world`s (5) ........................ (accidents, diseases, disturbances) are caused by dirty water. 'Action Aid' has started develop- ment. (6) ........................ (gatherings, reports, programmes) in eight of the world`s poorest countries.

(marks 05)

56. சாதாரண மின்கலமொன்றின் மின்னியக்க விசை
1. 1.0V 2. 1.5V 3. 2.0V 4. 2.5V

57. கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று
1. உதைப்பந்தாட்டம் 2. கைப்பந்தாட்டம்
3. துடுப்பாட்டம் 4. கிளித்தட்டு

58. அடிப்படை நிறமல்லாதது?
1. சிவப்பு 2. பச்சை 3. நீலம் 4. மஞ்சள்

59. காலத்தைக்காட்டும் சொல்
1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. இடைச்சொல் 4. உரிச்சொல்


60. அணிநடையின்போது இலகுவாய் நில் என்ற கட்டளை இட்டதும்,
1. காலை அகலவைத்து, கையை பின்னே கட்டவேண்டும்.
2. காலை அருகே வைத்து, கையை பின்னே கட்டவேண்டும்.
3. காலை அகல வைத்து, கையை அருகே விடவேண்டும்.
4. காலை அருகே வைத்து, கையை அருகே விடவேண்டும்.

**"நீர் பார்த்த கலைவிழா" என்னும் தலைப்பின் கீழ் ஏழுவாக்கியங்கள எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம் பெறுவதுடன், அவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலையும் திருத்த மானமுறையில் அமைந்திருக்கவேண்டும்.**

61. ------------------------------------------------
62. ------------------------------------------------
63. ------------------------------------------------
64. ------------------------------------------------
65. ------------------------------------------------
66. ------------------------------------------------

**படத்தைப் பார்த்து வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் கீழ் கோடிடுக.**

67) தோடம்பழத்துக்கும், மாம்பழத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம்




1)பாரம் 2)உருவத்தில் 3)நிறத்தில்

2) பிளாஸ்ரிக் போத்தலுக்கும், கண்ணாடிப் போத்தலுக்கும் இடையே உள்ள வித்தியாசம்




1)உருவத்தில் 2)பாரத்தில் 3)உயரத்தில்

3) வாழைப்பழத்துக்கும், வாழைக்காய்க்கும் இடையில் உள்ள வித்தியாசம்




1)நிறை 2)நிறம் 3)உருவம்

4) காகத்திற்கும் குயிலுக்கும் இடையில் உள்ள வித்தியாசம்




1)நிறம் 2)உருவம் 3)ஒலி

**கீழே உள்ள பாடலை அவதானித்து, வினாக்களுக்கு விடை எழுதுக. பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

சேவல் கூவி வாழ்த்த
சோலைக் குயில் பாட
ஆவலுடன் கிழக்கில்
ஆதவனும் வந்தான்

5) இப்பாடலில் கூறப்படும் பொழுது,
1) மாலைப் பொழுது 2) பகற்பொழுது 3) காலைப்பொழுது

6) ஆதவனும் வந்தான் என்பதில் ஆதவன் என்பது,
1) சிறுவன் 2) ஞாயிறு 3) மனிதன்

7) வந்தான் என்னும் சொல் காட்டும் காலம்,
1) நிகழ்காலம் 2) இறந்த காலம் 3) எதிர்காலம்

**இல. 8 - 10 வரையுள்ள வினாக்களில், கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு சமனான கருத்துடைய விடையைத் தெரிந்து, அதன் கீழ் கோடிடுக.**

8) தேவனுடைய வாகனம் அடிக்கடி இடையில் நின்றுவிடும்.
1) தேவனுடைய வாகனம் உடைந்தது.
2) தேவனுடைய வாகனம் அடிக்கடி வீதியில் செல்லும்.
3) தேவனுடைய வாகனம் பழையது.

9) பசுக்கன்று அடிக்கடி கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடும்.
1) பசுக்கன்று குறும்புத்தன்மை உடையது.
2) பசுக்கன்று அவசரபுத்தி உடையது.
3) பசுக்கன்று சாதுவானது.

10) எதிரே உள்ள பள்ளத்தில் வாகனங்கள் அடிக்கடி தடம்புரளும்.
1) பள்ளத்தில் வாகனம் செலுத்தமுடியாது.
2) பள்ளம் அபாயகரமானது.
3) பள்ளம் ஆழமானது.

**இல. 11 - 15 வரையுள்ள வினாக்களில் பிழையற்ற விடையைத் தெரிந்து, அதன் கீழ் கோடிடுக.**

11) கடும் மழையினால் ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. உடனடியாக நடக்கப்போவது -
1) வீதிகளும், வீடுகளும் தாழப்போகின்றன.
2) ஆற்றுநீர் வெளியே பாயப்போகிறது.
3) முதலுதவி சேவை வரப்போகின்றது.


12) இந்தமுறை குமரனுடைய வயலின் நல்ல விளைச்சல் பெறப்பட்டது-
1) வயல் சிறியதாக இருந்தமை.
2) செயற்கை உரத்தைப் பயன்படுத்தியமை.
3) குமரன் வயலை நன்கு கவனித்தமை.

13) மின்சாரம் தடைப்பட்டால் உடனடியாக செய்யவேண்டியது -
1) மின்சாரத்தடைக்கான காரணத்தைத் தேடிப்பார்க்க வேண்டும்.
2) வெளிச்சத்தைப் பெறக்கூடிய பொருளைப் பெறவேண்டும்.
3) மின்சாரத்தைப் பெறும் வழியை அறியவேண்டும்.

14) கடதாசியின் விலை திடீரெனக் குறைந்தால் -
1) மக்கள் துணிக்குப் பதிலாகக் கடதாசியைப் பாவிப்பார்கள்.
2) புத்தகங்கள் விலை குறையும்.
3) வியாபாரிகள் கடதாசி விற்பனையை நிறுத்தி விடுவார்கள்.

15) வரவர பஸ்வண்டிகளில் சன நெருக்கம் அதிகரிக்கின்றது. காரணம்,
1) பஸ்வண்டிகளின் எண்ணிக்கை குறைவானதால் ஆகும்.
2) புகைவண்டியைவிட பஸ்வண்டிப் பிரயாணம் வசதியானதால் ஆகும்.
3) பஸ் பிரயாணிகள் அதிகரித்ததால் ஆகும்.

**கீழே உள்ள வரைபு - நாவல்நகர் நூல் நிலையத்தில் கடந்த மூன்று வருடங்களில் இருந்த நூல்களின் அளவைக் காட்டுகிறது.**




16) கடந்த மூன்று வருடங்களிலும் புதிதாக வாங்காத புத்தகம்-
1) சிறுகதை 2) கவிதை 3) கட்டுரை

17) ஒவ்வொரு வருடமும் கூடுதலான பணம் செலவிடப்படுவது எந்தப் புத்தகங்களுக்காக -
1) சிறுகதை 2) கவிதை 3) கட்டுரை

18) 1998 இல் கவிதைப் புத்தகங்களின் எண்ணிக்கை எவ்வளவு அதிகமாக உள்ளது -
1) 20 2) 90 3) 40

**இல. 19 - 23 வரையுள்ள வினாக்களில் உள்ள கூற்றுக்கள் எப்போதும் உண்மையாக இருக்குமெனின் "சரி" எனவும், சில வேளை மாத்திரம் சரியாக இருக்குமெனின் "பிழை" எனவும் எழுதுக.**

19) வானம் நீல நிறமாக இருக்கும். ( )

20) சூரியன் மேற்குத் திசையில் மறையும். ( )

21) வானத்தில் நட்சத்திரங்கள் உள்ளன. ( )

22) பால் வெள்ளை நிறமுடையது. ( )

23) தாவரங்கள் எல்லாம் பச்சைநிறமுடையது. ( )

பின்வரும் சாதாரண நேரங்களை - நியம நேரத்தில் எழுதுக.
24) மு.ப 8.35
25) பி.ப 3.40
26) IV, XII, IX, XXIV, XIX என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்



# ENGLISH

PN.SHUTHARSON
TEACHER
KOKUVIL HINDU COLLEGE

**(1) Read the following note and fill in the missing words. Use the words given. The first one has been done for you.**

With, on, for, through, to, before

Saman
Hasitha's B' day is on 7th monday. Let's give him a surprise visit. Be at my place (1)............. 6.00 o' clock (2)............ your video camera. I'll be waiting (3)............. you.

Love,
Ruwan.

Ruwan
Sorry. I'll not be able to come. My science class goes on till late. Shall send the video camera (4).............. my brother. Give my wishes (5) .................. Hasitha

Love,
Saman.

(Marks 05)

**(2) Read the following conversation and fill in the blanks. Use the words/phrases in the box. One has been done for you.**

Should have obtained, nothing happens, the exact date, How can I help you, proof of purchase, doesn't work

Customer : Good morning. I'd like to speak to the manager, please.
Manager : I'm the manager, sir (1)..............................................?
Customer : Oh! really? It's this radio. It (2) *dosen't work.*
Manager : Mm............... Did you buy it here?
Customer : Of course. I bought it here. Look you switch it on and (3)..........................
Manager : Could I see your receipt?
Customer : Receipt? I haven't got one.
Manager : Oh! you (4)................ a receipt when you bought it.
Customer : I probably did. I must have thrown it away.
Manager : Ah! well, have you got any other (5)..........., the guarantee for example?
Customer : No. It must have been in the box. I threw that away too.
Manager : Oh, dear you really ought to have kept it. We need to know (6).....................
Customer : What? I only bought it yesterday! That young man over there served me.
Manager : That's all right then. (Marks 05)

**(3) Study the picture. Read the text about Mr.Gomes and fill in the blanks with appropriate words. One has been done for you.**



(Marks 05)

Mr.Gomes is 40 years old. He has a broad forehead. His straight black (1).................. is neatly combed. He wears (2) .......................... because his eye sight is weak. His face is coverd with a trimmed (3)................ Both his coat and (4).................... are striped but his (5)................. is plain coloured. His friends call him Mr.Smart.

**(4) Read the text and fill the grid.**

**In bed with Flu**

Doctor Mark pemberton, who just taken over a medical practice in rural suffolk, visited a 74 years old widow, Mrs.Ada Teppit at her home in the village of Nacton. Mrs.Teppit has been bed-ridden for 40 years. The doctor examined her but could not find anything wrong. He questioned her daughter. Norma, aged 54, and to his amazement discovered that forty years ago the village doctor had orderd Mrs. Teppit to bed because she had influensza and told her not to get up until he returned. He never returned and she never got up. Her daughter has been looking after her ever since. She has never married nor had any job other than taking care of her mother. Now Mrs. Teppit's muscles have wasted, and she has put on a lot of weight. She may never walk again as it has been for the past 40 years, she will go on reading books.

**Ada Teppit**

Her doctor: (1)..................................................
Place she lives (2)..............................................
Her age (3) .......................................................
Her daughter's name (4) ....................................
Period she has been in bed (5) ...........................
Her illness - at present: (6)...............................
- earlier : (7)..........................................................
Reasons for not walking :
(8)..........................................................
(9)..........................................................
Her past time: (10)..........................................

(5 marks)

# மாவீரர் தின நிகழ்வுகளை குழப்புவது காட்டுமிராண்டித்தனமான செயல்!

## தென்னிலங்கை பத்திரிகையாளர் சங்கத்தலைவர் தெரிவிப்பு

மாவீரர் நிகழ்வுகளை படையினரும், பொலிஸாரும் குழப்பமுயல்வது காட்டுமிராண்டித்தனமானதும், மனிதாபிமானமற்றதுமான செயலாகும் எனத் தெரிவித்தார் - தென்மாகாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் எஸ்.கவிரட்ண.

திருமறைக்கலாமன்ற ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெற்ற சமாதானத்திற்கான எழுத்தாளர், கலைஞர்கள் ஒன்றுகூடலில் கலந்து கொண்டபோது, எமது செய்தியாளருக்கு அளித்த விசேடபேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில் - எந்தவொரு இனத்திற்கும் தமது இன விடுதலைக்காக மடிந்தவர்களை நினைவு கூருவதற்கும், தமது இனத்தைத் தனித்துவப்படுத்துவதற்கும், கலாசார விழாக்களைக் கொண்டாடுவதற்கும் உரிமையுண்டு. இது அந்த இனத்தினுடைய அடிப்படை மனித உரிமையாகும். இதனைத் தடுக்கமுயல்வது ஏற்றுக் கொள்ள முடியாத செயலாகும்.

சிங்களவர்களும் போரிலே மடிந்த படையினர்களை நினைவு கூர்ந்து விழாக்களை கொண்டாடுகிறார்கள். அது போலத்தான் தமிழர்களும் போரிலே மடிந்த தமது உறவினர்களை நினைவுகூர விரும்புகிறார்கள். இதனைத் தடுக்கமுயல்வது எந்தவகையில் நியாயமாகும்.

இவ்வாறான செய்திகளை துரதிர்ஷ்டவசமாகத் தென்னிலங்கை பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. வடபகுதியிலுள்ள சில பத்திரிகையாளர்கள் - எம்மோடு தொடர்பு கொண்டு இது தொடர்பான செய்திகள், படங்களை எமக்கு அனுப்பி வைத்தால், அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஏ-9 நெடுஞ்சாலை போக்குவரத்திற்காகத், திறக்கப்பட்ட பின்னர் நான்கு தடவைகள் இவர் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளார். இரு கிழமைகளுக்கு பின்னரும் இவர் தனது சகாக்களுடன் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்கள்.பலவற்றை இவர் "சண்டே ஒப்சேபர்" நாளிதழில் எழுதியுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ச)

# மாவீரர் தின நிகழ்வைக் குழப்பும் படையினரின் செயற்பாட்டுக்கு தமிழ்க் காங்கிரஸ் கண்டனம்!

(கொழும்பு)

பொதுமக்கள் - மாவீரர்நாளை மிகவும் அமைதியானமுறையில் கடைப்பிடித்துவரும் நிலையில் - அரச படைகளும், பொலிஸாரும் வேண்டுமென்றே கவலைக்கிடமான முறையில் மாவீரர்நாள் செயற்பாடுகளைக் குழப்பும்வகையில் நடந்துகொள்வதை அவதானிக்க முடிகின்றது என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் விடுத்துள்ள ஊடகச் செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - பொதுமக்களும், விடுதலைப்புலிகளின் அரசியல்பிரிவும் மிகவும் அவதானத்துடனும், பொறுமை இழக்காமலும் இந்த விடயங்களைக் கையாண்டு வருகின்றனர்.

எனினும், படையினர் - மாவீரர் நினைவான அலங்காரக் கொடிகளை அறுத்தும், வளைவுகளைச் சேதப்படுத்தியும் வருகின்றனர்.

மாவீரர்நாள் நிகழ்வுகள் வன்முறையற்ற செயற்பாடு என்பதனால், இவ்வாறான இடையூறுகளை ஏற்படுத்துவதை படையினரும், பொலிஸாரும் தவிர்த்துக்கொள்ளவேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இரு தமிழ் வியாபாரிகள் மூதூரில் சுட்டுக்கொலை!

மூதூர் பிரதேசத்திலுள்ள இருதயபுரத்தில் - இரு தமிழ் வியாபாரிகள் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த இரு வியாபாரிகளுடன் சென்ற இன்னுமொரு நபர் காணாமற்போயுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான இறால்குழி கிராமத்தைச் சேர்ந்த இந்த வியாபாரிகள், தங்களது வியாபாரப் பணிகளை முடித்துக்கொண்டு, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்தக் கொலைகளுக்குப் பின்னே முஸ்லிம் தரப்பினரின் பழிவாங்கலே காரணமாக இருந்திருக்கலாம் என, மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இப்பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# விடுதலைப் புலிகளின் திட்டவரைபு குறித்து ஐ.தே.மு. அரசு ஏன் மௌனம் சாதிக்கிறது?

## வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் தினேஷ் கேள்வி

(கொழும்பு)

புலிகளின் திட்ட வரைபை அனைத்துக் கட்சிகளும் எதிர்க்கும்போது, ஐ.தே.மு அரசாங்கம் மட்டும் ஏன் மௌனம் சாதிக்கின்றது என்று, நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டு விவகாரத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - புலிகள் தமது வரைபுத்திட்டத்தில் - நாடாளுமன்ற அதிகாரத்தில் நிதி, நீதி அதிகாரங்களை கோரியிருக்கிறார்கள். இதனை ஐ.தே.மு அரசாங்கம் இதுவரை ஏன் நிராகரிக்கவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டைப் புலிகளுக்குத் தாரை வார்க்க நடவடிக்கை எடுத்திருக்கும் அரசாங்கம் - சாவதேச நாணய நிதியத்திடம் பொருளாதாரத்தைத் தாரை வார்த்து விட்டது. வரவு செலவுத் திட்டத்தை ஆழ்ந்து நோக்கும்போது, சர்வதேச நிதியத்துடன் நிதியமைச்சர் ஒப்பந்தம் செய்துள்ளார் போலத் தெரிகிறது. நீர் விநியோகம், அரச வங்கி, புகையிரதம், விமான நிலையம் போன்றவற்றை அரசாங்கம் - தனியார் மயப்படுத்தப்படும் என்பதையே இந்த வரவு - செலவுத் திட்டம் சுட்டிக்காட்டுகிறது.

10 இலட்சமாக உள்ள அரச ஊழியர்களை, புதிய ஓய்வூதியத்தை அறிமுகப்படுத்தி 6 இலட்சமாகக் குறைத்து, அவர்களை வீட்டுக்கு அனுப்ப எண்ணுவது அரச சொத்துக்களை - தனியார் மயப்படுத்துவதே அரசின் திட்டமாகும்.

அரச ஊழியர்களுக்கு 1250 ரூபா சம்பள உயர்வு போதுமானதல்ல. இது வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற சம்பளம் அல்ல. ஓய்வூதியர்களுக்கு 10 வீத அதிகரிப்பு - 5 1/2 இலட்சம் ஓய்வூதியர்களுக்கு எந்த வித நன்மைகளையும் அவர்கள் பெறப்போவதில்லை. அவர்களின் ஓய்வூதிய முரண்பாடுகள் இன்றும் தீர்ந்தபாடில்லை .

வற்வரி அதிகரிப்பினால் மின்கட்டணமும் அதிகரிப்பதோடு, உற்பத்திச் செலவுகளும் அதிகரிக்கவுள்ளது. இதனால், சகல பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. ஆனால், அரசாங்கம் வாழ்க்கைச் செலவு குறைந்துள்ளது என்று தம்பட்டம் அடிக்கின்ற போதிலும் இந்த வரவு - செலவுத் திட்டத்தினால் மக்களையும் குறிப்பாக விவசாயிகளையும் இந்த அரசாங்கம் ஏமாற்றிவிட்டது என்று தினேஷ் குணவர்த்தன மேலும் குறிப்பிட்டார்.

# பிரதான கட்சிகள் அதிகாரங்களைப் பகிர்ந்தால் இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வுகிடைக்கும்

## ஜனாதிபதி கூறுகிறார்

இரு பிரதான கட்சிகளுக்குமிடையில் அதிகாரங்களை - ஐம்பதுக்கு ஐம்பது எனப் பகிர்ந்தால், நாட்டில் தற்போதுள்ள பிரச்சனையை தீர்த்து சுமுகநிலையை ஏற்படுத்தலாமெனத் தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவரது செவ்வியில் பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கத்தை தடுக்க வேண்டுமெனில், கடந்த இரண்டு வருடங்களில் நூறு தடவைகளுக்கு மேல் என்னால் செய்திருக்க முடியும். ஆனால், நாடு அழிவுப் பாதைக்கு சென்று கொண்டிருந்த போதே நான் தற்போதைய முடிவை எடுத்தேன்.

ஜே.வி.பிக்கும், பொது ஜன முன்னணிக்குமிடையிலான கூட்டுத் தொடர்பாக கருத்து தெரிவித்த ஜனாதிபதி - அதிகாரப் பரவலாக்கலில் கூட்டுஏற்பட்டதும், இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியை அமைக்குமெனவும் தெரிவித்தார்.

# செய்யது பீடி கடத்திய நால்வரை மன்னார் பொலிசார் கைது செய்தனர்

(மன்னார்)

சட்டவிரோதமாக இந்தியாவில் இருந்து செய்யது பீடி கடத்தி வந்த நான்கு பேர் - மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முனதினம் மன்னார் கரிசல் ஓலைத்தொடுவாய் கடற்கரைக்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட "செய்யது பீடி" யின் 28 மூட்டைகள் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டது.

மன்னார் கரிசல் ஓலைத்தொடுவாய்ப் பகுதியைச் சேர்ந்த இவர்கள் 4 பேரும் மன்னார் பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அண்மைக்காலமாக இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கஞ்சா, அபின், போன்ற போதைவஸ்த்துகள் கடத்தி வந்த இவர்கள், முன்னரும் திருட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (201)

# தலைவர் பிரபா-கிறிஸ்பற்றன் சந்திப்புக்கு தேசிய எதிர்ப்பு முன்னணி கண்டனம்!

ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சியின் ஆதரவில் இயங்கும் தேசிய எதிர்ப்பு முன்னணி - ஐரோப்பிய யூனியனின் வெளியுறவு ஆணையாளர் கிறிஸ் பற்றன் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்திப்பதற்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

இவரது வன்னி விஜயத்திற்கு யார் அனுமதி கொடுத்தது என - தாம் ஜனாதிபதியையும், வெளிவிவகார அமைச்சரையும் கேட்க இருப்பதாக இந்த முன்னணி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பற்றனின் கிளிநொச்சிக்கான விஜயம், நாட்டின் தேசிய இறைமையை அவமானப்படுத்துவதாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பாதுகாப்பு அமைச்சு தற்போது நேரடியாகவே ஜனாதிபதியிடம் உள்ளது. எனவே, கிளிநொச்சிக்கான பற்றனின் விஜயத்திற்கு, இராணுவ ஹெலியைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பிரதமர் ரணில் தலைமையிலான அரசிற்கும், விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான பேச்சில் ஈடுபடும் நோர்வேயையும் இந்தமுன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

## ஜனாதிபதியிடம் உள்ள அமைச்சுக்கள் பற்றி

# வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் பிரதமர் ரணில் பதிலளிக்கமாட்டார்

வரவு - செலவுத்திட்ட விவாதத்தின்போது, ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுக்களின் சார்பில், நாடாளுமன்றில் பிரதமர் பதிலளிக்கமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை ஆகிய அமைச்சுக்களை- ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளதை அடுத்து, நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி இல்லாத நேரத்தில் பிரதமர் பதிலளிக்க வேண்டும். ஆனால், இந்த மூன்று அமைச்சுக்களின் சார்பில் பிரதமர் பதிலளிக்கமாட்டார் என்று, அரசாங்கத் தரப்பின் பிரதம பொறுப்பாளரும், அமைச்சருமான மகிந்த சமரவீர தெரிவித்தார்.

அண்மையில் நடந்த கட்சித் தலைவர்களின் மாநாட்டில் சபாநாயகர் ஜோசப்மைக்கல் பெரேரா ஜனாதிபதி பொறுப்பேற்ற மூன்று அமைச்சுகளின் சார்பில் பிரதமர் பதிலளிக்க வேண்டும் என்று தெரிவித்த கோரிக்கையை அடுத்தே, அமைச்சர் மகிந்த சமரசிங்க இதனை அறிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியினரால் நிர்வகிக்கப்பட்ட மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதை அடுத்தே இந்தச் சிக்கல் நிலை எழுந்துள்ளது.

# கனேடிய நகரங்களில் மாவீரர் நாள் நிகழ்வுகள்!

## றொறன்ரோவில் பிரதான நிகழ்வுகள்

(றொறன்ரோ)

தமிழீழ மாவீரர்நாள் - கனடாவில் பல்வேறு இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும், கனேடியக் கல்வி நிறுவனங்களில் கல்விகற்கும் தமிழ் மாணவர்களும் - மாவீரர்நாள் நிகழ்வுகளை நிகழ்த்தி வருகின்றனர்.

நாளை பிரதான நிகழ்வுகள் றொறன்ரோவில் இடம்பெறவுள்ளன. றொறன்ரோவில் உள்ள ரெக்ஸ்டேல் றொறன்ரோ சென்ரர், ஸ்காபரோ தெற்கு, மார்க்கம், ஸ்காபரோ வடக்கு ஆகிய இடங்களில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

இதேவேளை, எதிர்வரும் 29 ஆம் திகதி மொன்றியல் மற்றும் பிரிட்டிஷ், கொலம்பியா ஆகிய நகரங்களில் மாவீரர்நாள் நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

மொன்றியலில் பி.ப 5.00 மணிக்கும், பிரிட்டிஷ் - கொலம்பியாவில் மாலை 6.00 மணிக்கும் நிகழ்வுகள் ஆரம்பமாகுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, கனடாவில் இன்னொரு முக்கிய நகரமான ஒட்டாவாவில் கடந்த சனிக்கிழமை மாவீரர்தின நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நிகழ்வில் பெருமளவான புலம்பெயர்ந்த மக்கள் பங்குபற்றியுள்ளனர்.


இதனிடையே கனேடிய தமிழ் மாணவர்கள் - கல்வி நிறுவனங்கள் ரீதியாக மாவீரர்தின நிகழ்வுகளை நடத்திவருகின்றனர். கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமான இந்த நிகழ்வுகள் 27 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி வின்ஸர் பல்கலைக்கழகத்திலும் நேற்று முன்தினம் மக்மாஸ்ரர் மற்றும் குல்ப் பல்கலைக்கழகத்திலும், நேற்று வோட்டர்லூ, அஜின்கோட் கொலிஜியேற் பல்கலைக்கழகத்திலும் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இன்று ரைகோசன், சற்றெக்வா போரார், ஸ்ரீபன் லீகொக், சென்ரேனியல் ஆகிய பல்கலைக்கழகங்களிலும் நாளை றொறன்ரோ மற்றும் காரிலேரன் பல்கலைக்கழகத்திலும் மாவீரர்நாள் நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

அனைத்து தமிழ் மாணவர்களும் இணைந்து நடாத்திய மாவீரர் தின நிகழ்வுகள் - கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மார்க்கம் ஆர்மேனியம் தேவாலயத்தில் இடம்பெற்றது குறிப்பிடத் தக்கது.

# கௌரவத்துக்குரிய மாவீரர்களின் பெற்றோர்களே! உரித்துடையவர்களே!



எமக்கொரு நாடு வேண்டும்
எம் மக்களுக்கு விடுதலை வேண்டும்
எமது இனம் சுதந்திரமாக வாழவேண்டும்
என ஆக்ரோசமாக, இலட்சிய வேட்கையுடனேயே
மாவீரர்கள் களத்தில் வீழ்கிறார்கள்.
எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும்
எமது நாட்டின் விடுதலையை முரசறையும்
வீர சுதந்திர பிரகடனமாகவே சம்பவிக்கிறது.

மேதகு வே.பிரபாகரன், தமிழீழ தேசியத் தலைவர்

**கார்த்திகை 27 இல்
மாவீரர் துயிலும் இல்லம்
வாருங்கள்.....!
வாருங்கள்.....!**

தமிழ்மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காகவும், பாதுகாப்புக்காகவும், கௌரவத்திற்காகவும் தமது இன்னுயிரை அர்ப்பணித்தவர்கள் இந்த மாவீரர்கள்! இந்த தன்னலமற்ற தியாகிகளை உருவாக்கித் தந்த மாவீரர் பெற்றோர்களே! உரித்துடையவர்களே! உங்கள் பாதங்கள் பணிகிறோம். தாயக விடுதலைக் கனவோடு உங்கள் பிள்ளைகள் உறங்குகிறார்கள். உங்கள் பிள்ளைகளோடு சங்கமித்துக்கொள்ள மாவீரர் துயிலும் இல்லம் வாருங்கள் என அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

காலம் : கார்த்திகை 27
நேரம் : பிற்பகல் 3 மணி



## மாவீரர் துயிலும் இல்லங்கள்

வடமராட்சி : எல்லங்குளம்
தென்மராட்சி : கொடிகாமம்
வலிகாமம் : கோப்பாய்
தீவகம் : சாட்டி

ஏனைய மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்வோர் அருகிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை செயலகங்களில் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
யாழ். மாவட்டம்.**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# ஈழத் தமிழர்கள் உயிர்த்தெழுந்த நாள்

இன்று தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் பிறந்தநாள்.

நாளை மாவீரர் நாள்.

இந்த இரு நாட்களும் - ஈழத்தமிழ் மக்கள் அனைவரும் உணர்வுபூர்வமாகவும் எழுச்சியுடனும் எதிர்கொள்ளும் மிக முக்கியமான நாட்கள் ஆகும்.

ஈழத்தில் மட்டுமல்ல, உலகெங்கனும் தமிழர்கள் வாழும் இடங்களில் இவ்விரு நாட்களும் ஆண்டுதோறும் பூரிப்புடனும், ஆத்மார்த்தமான உணர்வுடனும் எதிர்காலம் குறித்த நம்பிக்கையுடனும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

பேரினவாத ஒடுக்குமுறைகளாலும், சட்டரீதியான அடக்குமுறைகளாலும் காலம்காலமாக அவலப்பட்டு, இராணுவ ரீதியிலான அழிவுகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், தம் ஸ்திரமான இருப்பை இழந்து, தம் மண்ணுடனான வாழ்வியல் வேர்களை அறுத்துக்கொண்டு, ஊர்விட்டு ஊராக, தேசம்விட்டு தேசமாக, இடம்பெயர்ந்தும், புலம்பெயர்ந்தும் திசைமாறிய பறவைகளாகித் திக்கற்று அலைந்த ஈழத்தமிழ் மக்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தி, அடிமை வாழ்விலிருந்து அவர்களை மீட்டெடுக்கவல்ல, அவர்களின் ஆற்றலையும், ஆளுமையையும் அவர்களுக்கு உணர்த்தி அவர்களின் அரசியல் விடுதலைக்கும், வாழ்வியல் விடிவுக்கும் வழிகாட்டியாக உதித்த இளஞாயிறு பிரபாகரன் - பிறந்தநாள் இன்றாகும்.

காலம் காலமாக... அதாவது, சுமார் ஐந்து தசாப்த காலமாக - இலங்கை சுதந்திரமடைந்தது முதல், பிரிட்டிஷ்காரரிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் - இலங்கையை ஆண்ட சிங்களத் தலைமைகள், சிறுபான்மையினத்தவரை குறிப்பாக தமிழ்பேசும் மக்களை நிரந்தரமாகவே இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் அரசியல் மூலோபாயங்களை வகுத்து, தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களை, தமது கைப்பொம்மைகளாக்கி அவர்களூடாகவே தமது அரசியல் இலக்குகளை வெகு இலாவகமாக எட்ட முயன்றதுடன் அதில் பெருமளவிலான வெற்றியையும் பெற்றனர்.

தமது மக்கள் ஒடுக்கப்படுவதை எதிர்த்து அவ்வப்போது விழிப்புணர்வு அடைந்த தமிழர் தலைவர்களிடையே மித்திரபேத தந்திரஉத்தியைப் பயன்படுத்தி பிளவுகளை, முரண்பாடுகளை ஏற்படுத்துவதிலும் வெற்றிகண்ட சிங்களத் தலைமைகள் அடக்குமுறைக்கு எதிராக அமைதியாகப் போராட முயன்றவர்களை ஆயுதமுனையால் அடக்கி ஒடுக்கினர்.

மக்களின் உணர்வெழுச்சி கிளர்ந்தெழுந்த வேளைகளில், இனக்கலவரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு அரச பயங்கரவாதத்தைத் தூண்டிவிட்டு, இரத்தக்களறியை உண்டுபண்ணி - தமிழ் மக்களையும், அவர்களின் வளங்களையும் அழித்ததுடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர்களின் பாரம்பரிய வாழ்நிலங்களையும் அபகரித்து அவர்களை நிரந்தர ஏதிலியராக்கினர்.

இந்தவேளைகளில் எல்லாம், அப்போதிருந்த மிதவாதத் தமிழ்தலைவர்களால் - கண்டனக்குரல் எழுப்புவதையும் அறிக்கைகள்விடுவதையும் தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை.

இடைக்கிடை தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக பேச்சு வார்த்தைகள் நடைபெற்றபோதும் ஒவ்வொருமுறையும் தமிழர்கள் பேய்காட்டப்பட்ட சம்பவங்களே நடந்தேறின.

பேரினவாதம் தனது கோர நடவடிக்கைகளை சகல வழிகளிலும் மேற்கொண்டதுடன், தமிழினத்தின் தனித்துவத்தையே சிதைத்தழிக்கும் முயற்சிகளை - அவர்களின் அடிப்படை மூலாதாரமான கல்வியிலேயே கைவைத்ததன் மூலம், தீவிரமாக தொடங்கியபோதே, ஒரு புத்தெழுச்சி தமிழ் இளைஞர்களிடையே உருக்கொள்ள ஆரம்பித்த வேளையிலேயே, தமிழ் மக்கள் தங்கள் நம்பிக்கை நட்சத்திரத்தை இனங்காணத் தொடங்கினர்.

'தீயனவற்றை அழிக்கவும் நல்லனவற்றைக் காக்கவும் நான் அவதாரம் எடுத்தேன்' என மகாபாரத கிருஷ்ணன், பகவத் கீதையில் கூறியதைப் போன்று? தமிழ் விரோதிகளையும் தமிழினத்தின் எதிரிகளையும் அவர்கள் வழியிலேயே எதிர்கொண்டு அழித்து தமிழ் மக்களையும், அவர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசத்தையும் பாதுகாக்க திடசங்கற்பமும் உத்வேகமும் கொண்ட அந்த இளைஞனின் நேரிய நோக்கமும் தலை வணங்காத தலைமைத்துவதிறனும் தமிழ் மக்களால் முழுமையாகப் புரிந்துகொள்ள ஒரு தசாப்த காலம்வரை எடுக்கவே செய்தது.

தங்களை வாழ்விக்க வந்த அந்த தலைவன் தங்களின் வரலாற்றையே புறங்காணா வீரவரிகளால் எழுதப்போகிறான் என்பதை அப்போது உடனடியாக அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனினும் வரலாறு அதனை அவர்களுக்கு உணர்த்தி நிரூபித்தது. இது பிரபாகரன் காலம் என்பதை அவர்கள் உணந்தபோது, அவர்கள் இதயம் பெருமிதத்தால் விம்மியபோது, தமிழ் மக்களின் வீரம் வரலாறு படைக்கத் தொடங்கிவிட்டது.


பிரபாகரன், அரைநூற்றாண்டினை எட்டியுள்ள இந்த வேளையில், சர்வதேசமே - தமிழ் மண்ணை, தமிழ் மக்களை, தமிழர் மாண்பினை பிரமிப்புடனும் பேரார்வத்துடனும் உற்று நோக்கத் தொடங்கியிருக்கிறது.

பிரபாகரன் அதிகம் பேசாத் தலைவன். ஆனால் எல்லோராலும் வியந்து பாராட்டிப் பேசப்படும் தலைவன்.

அந்தப் தலைவனின் பெயர்தான் தமக்கு இன்று உலகளாவியரீதியில் அசைக்கமுடியாத முகவரியாகிவிட்டதில் தமிழர்கள் பூரித்துப்போய் உள்ளனர்.

அதனால் அந்தத் தலைவனின் பிறந்தநாளை தமிழர்கள் தங்களின் பிறந்தநாளாகக் கொண்டாடுகிறார்கள். அந்தநாளே ஈழத் தமிழர்கள் மீண்டும் தமிழர்களாக உயிர்த்தெழுந்த நாளாகவும் இருக்கிறது என்பதும் மிகையான ஒன்றல்ல.

## நாடும் நடப்பும்



செய்தி : சமாதான விரோத - தமிழின விரோத சக்திகள் பேரினவாதிகளுக்கு போர் வெறியை ஏற்படுத்துகிறார்கள்

# மாவீரர்களின் தியாகத்தின் உணர்வலைகளை வெளிப்படுத்த அனைவரும் திரண்டெழுந்து வாரீர்

## மாவீரர் ஏற்பாட்டுக்குழுத் தலைவர்

இராணுவ அடக்குமுறையால் மாவீரர்களின் தியாகத்தை நாம் நினைவுகொள்வதை யாரும் அடக்கிவிடமுடியாது என்பதை உலகறியச் செய்யும் வகையில் அனைவரும் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அணிதிரண்டு வாருங்கள்.

இவ்வாறு - வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ்.மாவட்ட மாவீரர்தின ஏற்பாட்டுக்குழுவின் தலைவரும் யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளருமான மா.இளம்பிறைநாதன்.

நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றியபோது தெரிவித்ததாவது, தமிழ்மக்கள் உள்ளவரை இந்த நாட்டில் மாவீரரின் புகழ் நினைவுகூரப்படும். இதனை யாரும் தடுக்க முடியாது.

எமது மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் அவர்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை. இதனை எண்ணும்போது, உள்ளத்தில் ஏதோ ஓர் சோகம் உண்டாகும். மாவீரரின் தியாகங்களை மதித்தே எமது தேசியத்தலைவர் மற்றும் போராளிகள் தமது எந்தவொரு செயல்களையும் ஆற்றி வருகின்றனர்.

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துவிட்டுக் காவியமானவர்கள் தமது கனவுகளை அவர் கைகளில ஒப்படைத்துவிட்டுச் சென்றுள்ளார்கள்.

அவர் இவற்றை மனதில் கொண்டே பேச்சுவார்த்தை மேடையில் உள்ளவர்களுக்கும், தமிழர் உரிமைகளுக்குப் பங்கம் ஏற்படாதவகையிலான தீர்வை வேண்டுமாறு கூறியிருக்கிறார்.

எனினும், சிங்களத்தலைமைகள் எமது மாவீரர்களுக்கு மதிப்பளிக்காது, எம் மக்களின் உணர்வுகளையும் புரிந்துகொள்ளாது மிலேச்சத்தனமாகச் செயற்பட்டுவருகின்றது.

இன்று தென்பகுதியில் ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்பம் தமிழர்களுக்கு எந்தவொரு தீர்வினையும் வழங்க சிங்கள அரசுகள் தயாராக இல்லை என்பதைக் காட்டி நிற்கின்றது.

இந்தத்தருணத்தில் உலகநாடுகள் எம்மை உற்றுநோக்கிய வண்ணம் உள்ளன. எமது மாவீரர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலி எம் உணர்வுகளையும், வேண்டுகோள்களையும் உலக நாடுகளுக்கே எடுத்துக்காட்டுவதாக வேண்டும்.

இராணுவ அவமதிப்புகளும், மிரட்டல்களும் எம்மக்களைப் பயப்படுத்துமளவுக்கு அவை ஒன்றும் புதிதான விடயங்கள் அல்ல.

இதேமண்டபத்தில்தான் 1974 ஆம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சி மாநாடு இடம்பெற்றபோது, அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். அந்த இடத்தில் வீரத்தின் விழுதுகளான மாவீரர்களுக்கு மகுடம் சூடி, அவர்களைப் பெற்ற தவப்பெருந்தகைகளுக்கு விழா எடுக்கப்படுகின்றது.

இந்த நாட்டில் உள்ள உயர்பதவிகளைவிட மாவீரன் ஒருவனின் பணியும், தகுதியும் உயர்வானது. இது வெறும் போலிப் பேச்சல்ல. தனது இனத்திற்காக உயிர்கொடுக்கும் ஆற்றல் யாருக்கும் இலகுவில் ஏற்பட்டுவிடாது.

அத்தகைய உணர்வினால் உந்தப்பட்டு உலகில் உயர்ந்த இடத்தில் எமது மாவீரர்கள் உள்ளார்கள்.

அவர்களைப் பெற்ற பெரும் செல்வங்களான உங்களைக் கௌரவிப்பதில் ஆனந்தம் அடைகின்றோம்.

உலகில் எந்தவொரு இராணுவமும் மாவீரர்களுக்கு கொடுக்காத மரியாதையை தமிழீழ விடுதலைப் புலிகள் கொடுக்கின்றனர்.

அனேகமான நாடுகளில் இறந்த சக வீரரின் உடலைப் பற்றி மற்றைய வீரர்கள் பெரிதும் கவனிப்பதில்லை. ஆனால், எமது போராளிகள் பலர் சகதோழனின் உடலை எடுப்பதற்காக மாவீரர் ஆகிய சம்பவங்கள் நிறையவே இடம்பெற்றிருக்கின்றன.

அந்த அளவுக்கு மாவீரர்களை மதிக்கும் போராளிகளும், தேசியத்தலைவரும் கொண்ட அமைப்பு - தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சி.விஜிதரன் தனது உரையில்,

எமது மாவீரர்கள் அதாவது, உங்கள் பிள்ளைகள், உங்கள் நண்பர்களான மாவீரர்கள் வாழ்ந்த இந்த மண்ணில், சொந்த மண்ணில் அவர்களை நினைவுகூரத் தடை விதிக்கப்படுகிறது.

ஆனாலும், எமது மக்கள் உணர்வுபூர்வமாக மாவீரர்தின நிகழ்வை அனுஷ்டித்து, எதிரியின் செயல்களுக்கு நல்ல பாடம்புகட்ட வேண்டும் என்பதே எமது அவா என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாவீரர் தின எழுச்சிநாள் நிகழ்வுகள் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் தமிழீழ பிரதேசமெங்கும் நேற்று உணர்வு பூர்வமாக ஆரம்பமானது. கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில், பொதுச் சுடரை மாவீரர்களான கப்ரன் சுருளி மற்றும் தமிழ்ச்செல்வன் ஆகியோரின் தாய்மார்கள் ஏற்றிவைத்தனர்.

கோப்பாய் மாவீரர் துயிலுமில்லப் புனரமைப்பு குழுவின் பொருளாளர் எஸ்.சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தேசியக்கொடியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றினார். அதனைத் தொடர்ந்து அகவணக்கமும், மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்களால் மாவீரர் தினத்தையொட்டி கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணியொன்றும் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை - யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ்.பகீரதன் தலைமையில், இடம்பெற்ற நிகழ்வில், தமிழீழ தேசியக்கொடியை யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார். முன்னதாக பொதுச்சுடரை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் ஏற்றிவைத்தார்.

பல்கலைக்கழக நுழைவாயிலுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள விசேட மாவீரர் நினைவுப் பந்தலில் வைக்கப்பட்டுள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட மாவீரர்களின் உருவப்படங்களுக்கும் ஈகைச்சுடர் ஏற்றி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் வி.பி.சிவநாதன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதனைவிட யாழ்.மாவட்டத்தில் பல இடங்களிலும் மாவீரர் தின எழுச்சி நிகழ்வுகள் நேற்று தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டதோடு, மாவீரர்களுக்கு தமது உணர்வுபூர்வமான அஞ்சலியையும் செலுத்தினர். (ச)

## மாவீரர் நாளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தளிர் சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள்!

தமிழீழ மாவீரர் நாளன்று வன்னியில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பிறக்கும் குழந்தைகள் ஒவ்வொன்றுக்கும் கிராமிய அபிவிருத்தி வங்கி இலவசமாக சேமிப்பு கணக்குப் புத்தகங்களை வழங்கவுள்ளது.

இன்று நள்ளிரவு 12 மணிக்கும், நாளை நள்ளிரவு 12 மணிக்கும் இடையில் பிறக்கின்ற குழந்தைகளுக்கே தளிர் சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கே இந்தக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்படவிருப்பதாக கிராமிய அபிவிருத்தி வங்கியின் மேலாளர் தெரிவித்துள்ளனர்.

# சந்திரிகாவும் ரணிலும் முதலில் அதிகாரத்தினைப் பகிர வேண்டும்

நேற்றைய தொடர்ச்சி...

நாடாளுமன்றத்தில் ரணில் தலைமையிலான ஆளும் கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் இல்லாததினால் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதால் பயன் கிட்டப் போவதில்லை என்று, விடுத



லைப் புலிகள் தெரிவித்தனர். இதனால், சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னதாகப் போரினால் பாதிக்கப்பட்டு, தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியாமலும், அப்பாதிப்பிலிருந்து மீளமுடியாமலுமிருக்கும் மக்களுக்கு புனர்வாழ்வு-புனரமைப்பு அவசியமென்று, விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். அதேசமயம் பிரதமர் ரணில் தலைமையிலான அரசின் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும், அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்றும் உலகநாடுகள் பலவும் இலங்கைக்கு நிதி உதவியளிக்க முன்வந்தன.

வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதி உதவி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரியமுறையில் கிடைக்கச்செய்வதற்கு வடக்கு - கிழக்கில் உறுதியான நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டுமென விடுதலைப் புலிகள் கோரினர். இதை ஏற்றுக்கொண்ட ரணில் அரசு இதற்கான திட்டவரைபு ஒன்றைத் தயாரித்துக் கொடுத்தது. இது திருப்தியளிக்கவில்லை எனப் புலிகள் நிராகரித்தனர். மீண்டும் ஒரு திட்டவரைபை அரசு தயாரித்தளித்தது. இதிலும், திருப்தியடையாத விடுததலைப் புலிகள் பல நாடுகளுக்கு சென்று சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடாத்தி இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபையொன்றை அமைப்பதற்கான திட்டவரைபு ஒன்றைத் தயாரித்துக் கையளித்தனர்.

இந்த திட்டவரைபை வைத்து சமாதானப் பேச்சுக்களைத் தொடங்கலாம் என்று, சமாதானப் பேச்சுக்களுக்கு அரசாங்கத்தின் சார்பில், பொறுப்பான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார். இந்தச் சமயத்தில் சமாதானப்பேச்சுக்களுககான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசனும், விசேட சமதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் கொழும்புக்கு வரவிருந்தனர். இதே நேரம் சமாதான முயற்சிகள் சம்பந்தமாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்றார். அவர் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்திப்பதற்காக அமெரிக்கா போய் இறங்கிய சமயத்தில் இலங்கையில் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று, நாடாளுமன்றக் கூட்டத்தை ஒத்திவைத்து அதிரடி நடவடிக்கையை ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்டார்.

ஜனாதிபதியின் இந்த அதிரடி நடவடிக்கை உள்நாட்டில் மட்டுமல்ல, உலக நாடுகளிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

விடுதலைப் புலிகளுடன், ரணில் அரசாங்கம் சமாதானப் பேச்சு முயற்சியைத் தொடங்கிய காலத்திலிருந்து, தானே சமாதான முயற்சிகளைத் தொடங்கியதாக ஜனாதிபதி சந்திரிகா இடையிடையே சொல்லிக் காட்டி வந்தார். அவரது கட்சியினரும் சந்திரிகா தொடங்கிய சமாதான முயற்சிகளை இப்போது விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக நடத்தி வருவதாகக் கூறிவந்தனர்.

விடுதலைப் புலிகளால் இடைக்கால தன்னாதிக்க சபைத் திட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டதும், தாம் முன்பு வெளியிட்ட அதிகாரப் பரவலாக்கல் திட்டமே இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமைய வேண்டும் என்று சந்திரிகா அம்மையார் தெரிவித்தார்.

'விடுதலைப் புலிகளின் இடைக்கால' தன்னாதிக்க அதிகாரசபையான வரைபு - தமிழீழம் அமைப்பதற்கான திட்டவரைபு என்று பொது ஜன ஐக்கிய முன்னணியினரும், ஜே.வி.பியும், சிஹல உறுமயவும் கூறிவருகின்றன.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஜனாதிபதி ஏற்றுக்கொள்கிறார். அதேசமயம் தமது திட்டத்தின்படிதான் அதிகாரம் பகிரப்பட வேண்டுமென்கிறார்.

அதிகாரப்பரவலாக்கல் என்ற பேச்சுக்கே இடமிருக்கக்கூடாதென்பது ஜே.வி.பியினதும், சிஹல



உறுமயவினதும் நிலைப்பாடு, போர் புரிந்து புலிகளை முறியடிக்க வேண்டுமென்று சிஹல உறுமய சொல்கிறது.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்தால்தான் ரோக்கியோ மாநாட்டில் வெளிநாடுகள் உதவிவழங்குவதற்கு ஒப்புக்கொண்ட, பலகோடி ரூபாய்கள் இலங்கைக்கு கிடைக்கும். சமாதான முயற்சிகள் மேலும் மேலும் தாமதமானால், இந்த நிதி வேறு நாடுகளுக்குப் போய்விடலாமென்றும் எச்சரிக்கை விடப்பட்டது.

இதேசமயம் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படாத நிலையில் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது சிரமம் என்று, நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்திருக்கிறார்.

உலக நாடுகள் பலவும் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டிக்கு விரைவில் முடிவுகண்டு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்குமாறு இருவரையும் வற்புறுத்தி வருகின்றன.

ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரமா, நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட ஆளும் கட்சியின் தலைவரான பிரதம மந்திரிக்குள்ள அதிகாரமா வலிமையுடையது என்பதே இன்றுள்ள பிரச்சினை.

பொறுப்பெடுத்த பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு ஊடகத்துறை அமைச்சுக்களைத் திருப்பிக்கொடுக்க முடியாதென்பது ஜனாதிபதியின் பிடிவாதம்.பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பு அரசிடம் இல்லாமல் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதில் அர்த்தமில்லை, தொடர முடியாது என்பது பிரதமரின் வாதம்!

இப்பொழுது இருவருக்குமிடையே இணக்கப்பாடு காண்பதற்கு அதிகாரிகள் குழு ஆராய்ந்து வருகிறது. பிரிட்டனிலிருந்து லியன்பொக்ஸ் என்றொரு அமைச்சர் முன்வந்து எதிர்க்கட்சிக்கும், ஆளும் கட்சிக்கும் இடையே முக்கிய விட



யங்களில் மோதல் ஏற்படாமல் தவிர்த்து இணங்கிப்போகக்கூடிய உடன்பாடு ஒன்றைச் செய்திருந்தாரே நினைவிருக்கிறதா?

அந்த உடன்பாட்டை மீண்டும் தூசுதட்டி எடுத்து இப்பொழுது புதுப்பிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுமட்டுமல்ல இப்போதுள்ள நிலையில், சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் சில அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்வதற்கு வேறு வழியில்லை என்று, இருதரப்பும் இணக்கத்துக்கு வரலாமென்று அரசாங்க வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு, தமிழ்மக்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கு முன் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே தோன்றியுள்ள அரசியல் நெருக்கடிக்கு இருவருக்குமிடையே அதிகாரத்தைப் பரவலாக்குவதுதான இப்போதுள்ள ஒரே வழியென்ற கருத்து அரசியல் வட்டாரங்களில் எழுநதுள்ளது.(தொடரும்........)

**எஸ்.எம்.ஜீ.**

# தமிழ் - சிங்கள கலைக்கூடலும் சிஹல உறுமயவின் வெறியாட்டமும்

(நேற்றைய தொடர்ச்சி......)

பேராசிரியர் கா. சிவத்தம்பி உரையாற்றுகையில், போரின்போது இரு பக்கங்களிலும் வெளிவந்த இலக்கியங்கள் மனிதம்பற்றிப் பேசியுள்ளன. ஆனால், எங்களுடைய ஒருமைப்பாட்டை பேசாது தனித்துவங்களை, வேறுபாடுகளைப் பேசிவந்துள்ளோம். இதன்காரணமாக பலவற்றை மறந்துவிட்டோம். இந்தக் கலைக்கூடல் மீளக்காண அமைய வேண்டும். ஒருமைப்பாடு. உயர்மட்ட ஒருமைப்பாடல்ல...

உயர்ந்த பௌத்தம், கம்மடுவ பௌத்தம்வரை வித்தியாசமின்மையானதாக அமைந்துள்ளது. பௌத்த, சமண மதம் தமிழரிடம் மேலோங்கி இருந்தது. பௌத்தத்தின் நான்கு பிரிவுகளும், சிவஞான சித்தியார் நூலில் உள்ளது. சிங்களத்திற்கும் தமிழிற்கும் இடையே இருந்த உறவு மிகப் பெரியஉறவு.தமிழ் நூல்களிலும் சிங்களம் பற்றி உள்ளது. அடியார்க்கு நல்லார் உரையில் மெய்க்கூத்துப் பற்றிச் சொல்லும்போது, சிங்களக் கூத்துப் பற்றிச் சொல்கின்றது. இந்த நாட்டின் இருப்பே இருமொழி ஓலி தான் அதிலும் முக்கியம் அடிநிலை மக்களின் ஒருமைப்பாடு பழமொழிகள் ஒருமைப்பாடுடையவை. நாடகத்துறையில் தமிழ்சிங்கள உறவு வடிவ வேறுபாடற்றது. சரத்சந்திர, வித்தியானந்தன், மௌனகுரு, சண்முகலிங்கம்,சிதம்பரநாதன்,வரை நாடககூத்து ஒரே வடிவில் உள்ளது.

எங்கள் எங்கள் தனித்துவத்தை பேணுவதன்மூலம், இருவரும் ஒருவராகலாம்.அந்த மரபிலே நாடு உள்ளது. இது சிக்கலான, கடினமான முறையல்ல. இந்தியாவில் பல மொழிகள் உள்ளன... இது பற்றி பாரதியாரின் பாட்டொன்றை பாருங்கள்.

"செப்பு மொழிபதினெட்டுடையாள்
சிந்தனை ஒருமொழியுடையாள்"

அதன் அடிப்படையில் ஏன் இரண்டு மொழிகள் ஒரு சிந்தனையைப் பேசமுடியாதா? சிங்களமும்-தமிழும் ஒரு மொழியைச் சொல்லாவிட்டால்... நாம் இலங்கையராக இருக்கமுடியாது. பேராசிரியர் நெற்றியடியாக சொன்னவிடயம், துளியளவும் பிசகாத உண்மையாகும். இப்படியான ஆரோக்கிமான கருத்துப்பரிமாற்றங்கள் - உள்ளரங்கில் சிறப்பித்துக் கொண்டிருக்க சிஹல உறுமய வெளியே கூச்சலும் கும்மாளமும் போட்டது.

சிஹல உறுமய தான் அப்படியென்றால் ஈ.பி.டி,பி தானும் எதையாவது செய்யவேண்டுமென்ற துண்டுப்பிரசுரமொன்றை வெளியிட்டது. அதில் ஹிரு குழுவினரிற்கும் வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டது. 'பாசிசப் புலிகளிற்கு மாற்றுக் கருத்தை ஏற்படுத்துவது எப்படியென்பதைக் கற்றுக் கொடுங்கள்' என குறிக்கப்பட்டிருந்தது. ஏன் இவர்களிற்கு வேறு தொழிலே இல்லையா? யாரைப் பாசிசப் புலிகள் என்று குறிப்பிட்டார்கள்.?

பேராசிரியர் கா.சிவத்தம்பி, முல்லைமணி, புதுவையன்பன், அந்தனி ஜீவா, சோ.பத்மநாதன், சு.வில்வரட்ணம், இராஜதர்மராஜா, நிலாந்தன், செம்பியன்செல்வன், கலைச்செல்வன், அரசையா, பாலசுகுமார், தேவாணந், தெளிவத்தை ஜோசப், அ.ஜேசுராசா, கமலினி செல்வராஜன், செ. யோகநாதன், க.சட்டநாதன், குழந்தை ம.சண்முகலிங்கம், அப்துல் ஜபார், சு.ஜெயச்சந்திரன், கந்தையா சிறி கணேசன், நிராஜ்டேவிட், பா.சிவகுமார், டி.சிவராம், யதீந்திரா, சண்முகம் சிவலிங்கம், நாச்சியார் செல்வநாயகம் எனநூற்றுக்கணக்கான படைப்பாளிகள், கலைஞர்கள் இவர்களா புலிகள்? அரசியலுக்காக எதை வேண்டுமானாலும் சொல்வதா? இப்படிக் கூறியதன்மூலம், சிஹல உறுமயவினரின் பேரினவாதக்கூச்சலுக்கு வலுச்சேர்க்க மட்டுமே முடியும். இது போன்றவற்றைத் தொடர்ந்தும் செய்து வருவதன்மூலம், தாங்கள் யார் என்பதை ஏதோவொரு வகையில் வெளிப்படுத்துகின்றனர் என்பதை தமிழ் மக்கள் அறிந்துகொள்ள முடிவதாகவே தென்படுகின்றது.

தமிழரின் அரசியலை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் - இன்று அனைத்துலக மட்டத்திற்குச் சென்றிருக்க, கொழும்பில் அரசியல் நடத்துவதற்கு - கலைஞர்களும், படைப்பாளிகளும் செல்லவில்லை. அந்தத் தேவையும் கலைஞர்களுக்கு இருக்கவில்லை. இதனைச் சில ஊடகங்களும் இருட்டடிப்புச் செய்து, பேரினவாதக்கூச்சலுக்கு உறுதுணையாக இருப்பது - உண்மையைப் புதைக்க எடுக்கும் முயற்சியாகவே கருதமுடிகின்றது. அதனால் தானோ தெரியவில்லை -இருண்மையை ஏற்படுத்த - கறைபடிந்த வெண்மைத்திரையை மூடி, மெய்யை மறைக்கப் பாடுபடுபவர்களின், திரையைக் கிழித்து, உண்மையை, உண்மையான மனிதத்தை தெரியப்படுத்துவதற்காக - மேடையின் பின்புறம் கலையம்சம் கொண்ட திரை கிழித்து, மனிதத்தை உண்மையான உருவில் காண்பதற்கு, வடிவமைப்பொன்றைச் செய்துவைத்தனர்.

உண்மையினைக் காண்பிக்க, மேடையின் பின்புறம் அமைக்கப்பட்ட அந்தக் காட்சி... உண்மையில் சிஹல உறுமயவுடன் கைகோர்த்து நின்றவர்களின் உண்மைநிலையினையும் திரைகிழித்துக் காட்டியதாகவே அமைந்துவிட்டது.

சிங்கள - தமிழ் கலைக்கூடல் தமிழ், சிங்கள மக்களின் உறவைப்



பலப்படுத்தும் அவசியமான நிகழ்வென்பதைத், கலந்துகொண்ட அனைவரும் சரியானமுறையில் புரிந்துகொண்டுள்ளமை - நிகழ்வின் வெற்றி. இதனை மக்களும் உள்வாங்கிக் கொண்டு, அந்த உறவைப்பலப்படுத்தவேண்டும். போர் எதைச் செய்துள்ளது? போர் ஏன் நடைபெற்றது? என்பனபோன்றவற்றைச் சிந்திக்காமல் இருப்போமானால், நாட்டில் மிகமோசமான எதிர் விளைவுகளைச் சந்திக்கவேண்டிவரும். தமிழரின் ஈழவிடுதலைப்போர் - சிங்கள மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டதல்ல என்பதைச் சிங்கள மக்கள் சிந்தித்துணரவேண்டும். இதனைக் கலைஞர்களாலும், படைப்பாளிகளாலும், மக்களிற்கு உணர்த்தமுடியும்.

சிங்கள மக்களிடையே ஈழவிடுதலைப் போராட்டம் - பிரிவினைக்கான போராட்டம் என்றே கூறிவந்துள்ளார்கள். பேரினவாதிகளின் இந்த பரப்புரை தவறானது. சிங்கள மக்களிற்கு எதிரானதல்ல, தமிழரின் விடுதலைப் போராட்டம் தமிழரின் உரிமையினைப் பெறுவதற்கானதே என்பதனை எவரும் மறுதலிக்க முடியாது. சிங்கள மக்களுக்கு எதிராகப் போர் நடத்தப்படுமாயின், கட்டு


**கனகரவி**

நாயக்காவைப் புலிகளால் தாக்க முடியுமாயின் - தெற்கிலுள்ள சிங்களக் கிராமங்களைப் பொதுமக்கள் கூடிக்குவியும் மையங்களை இலக்குவைத்துப் பரவலான தாக்குதல்களை நடத்தமுடியாதா? மிகவும் பலம்பொருந்திய படைத்தளங்களைத் தாக்கியழித்த புலிகள் - திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசங்கங்களில் இருக்கும் சிங்களக் குடியேற்றக் கிராமங்களை அழிக்கமுடியாதா? ஆகவேதான் தமிழரின் விடுதலைப் போராட்டம் - சிங்கள மக்களிடையே தவறாகப் பரப்புரை செய்வதைக் கைவிடவேண்டும். இல்லையெனில்-

இலங்கைத்தீவுக்கு ஆபத்தை

(11 ஆம் பக்கம் பார்க்க)

# கொலம்பிய போராளி அமைப்பால் இரண்டு வெளிநாட்டவர் விடுதலை



கொலம்பியாவில் போராளி அமைப்பான இடதுசாரி தேசிய விடுதலைப் படையினர் தாம் தடுத்து வைத்திருந்த ஏழு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளில் இருவரை விடுவித்துள்ளார்கள். விடுவிக்கப்பட்ட உல் லாசப்பிரயாணிகள் ஸ்பெயின், ஜேர்மன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.


கொலம்பிய அரசும், ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் நடுவர்களும் இவ்விடுவிப்பு முயற்சியில் தீவிர பங்கு கொண்டிருந்தார்கள்.

வழமையாக கொலம்பிய தீவிரவாதிகள் பணயக்கைதிகளை விடுவிப்பதில் பெருந்தொகையான பணத்தை கப்பமாகக் கேட்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். கொலம்பியாவில் வாழும் பழங்குடி மக்களை வேறொரு குழுவினரான 'பராமிலிட்டரி' அமைப்பினர் துன்புறுத்துவதை விசாரிக்க வேண்டும் என கேட்டிருந்தார்கள். இம்மக்களின் பிரச்சனைகள் கவனத்தில் எடுக்கப்படும் என, கொலம்பிய அரசும், நடுவர்களான கத்தோலிக்கத் திருச்சபையும் தெரிவித்த பின்னரே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மிகுதியாக உள்ள ஐந்து உல்லாசப் பிரயாணிகள் வேறுஒரு இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று பலஸ்தீனப்போராளிகள் விடுதலை!

இஸ்ரேலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, மூன்று பலஸ்தீனப்போராளிகள் காஸாப் பிரதேசத்தில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். பலஸ்தீனர்களுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்பாடாகவே, இவர்களின் விடுதலை அமைந்துள்ளதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்தார்.



இவர்கள் கமாஸ் அமைப்பின் தீவிரப் போக்குக் கொண்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை விட மேலும் 15 பலஸ்தீனப்போராளிகளை விடுதலை செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தனித்து விடப்பட்டுள்ள சில யூதக் குடியிருப்புக்களையும் அகற்றுவதற்கு ஷரோன் திட்டமிட்டுள்ளதாகவும், இதன் மூலம் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சில பகுதிகள் பலஸ்தீனத்துடன் இணைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இஸ்ரேல் ஜனாதிபதி ஏரியல் ஷரோனின் நல்லெண்ண முயற்சிகளை, பலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத் பலஸ்தீனியர்களின் நிலங்களை அபகரிப்பதற்கான முயற்சியே இதுவென தெரிவித்தார்.

## குடும்ப மரியாதையைக் காப்பாற்றுவதற்கு பாகிஸ்தானில் கொல்லப்படும் பெண்கள்!

பாகிஸ்தானில் குடும்ப மரியாதையைக் காப்பாற்ற எனக்கூறி, நூற்றுக்கணக்கான பாகிஸ்தானியப் பெண்கள் ஒவ்வொரு ஆண்டும் கொல்லப்படுகின்றார்கள்.


பல்கலைக்கழக மாணவி ஒருவர் தன்னுடன் கல்விகற்ற மாணவனை திருமணம் செய்திருந்தார். பெண்ணின் உறவினர்கள் தமது குடும்ப மரியாதைக்கு பங்கம் விளைவித்துள்ளதாகக் கருதி, இவரைக் கொலை செய்ததாக விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு கொல்லப்பட்ட பெண்ணின் உடலை, புதைகுழியிலிருந்து மீண்டும் வெளியே எடுத்து பரிசோதனை செய்யுமாறு, பாகிஸ்தான் ஜனாதிபதி பொலிஸாருக்கு கட்டளை பிறப்பித்துள்ளார். பஞ்சாப்பின் தென்பகுதியில் இவ்வருடம் இதுவரை 62 குடும்பமரியாதையைக் காப்பாற்றும் பெண் கொலைகள் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

# உலக நோக்கு

## காஷ்மீரின் எல்லைப் பிரதேசத்தில் நள்ளிரவிலிருந்து யுத்த நிறுத்தம்!

### பாகிஸ்தான் அரசு அறிவிப்பு



இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே அமைந்துள்ள சர்ச்சைக்குரிய காஷ்மீர் பிரதேசத்தில், நேற்று நள்ளிரவிலிருந்து போர்நிறுத்த ஒப்பந்தம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த எல்லைப்பிரதேசத்தின் இரு பகுதியிலும் நிலைகொண்டுள்ள படையினர், துப்பாக்கி பிரயோகங்களை நடத்துவது வழக்கமான ஒரு செயற்பாடாகும் 1971 ஆம் ஆண்டு இப்பிரதேசத்தை இருசமமாகப் பிரித்து இருபகுதியினரும் தம்வசம் வைத்துள்ளார்கள். சென்ற ஆண்டு இந்தியப் நாடாளுமன்றம் பாகிஸ்தான் தீவிரவாதிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பின் எல்லைப் பகுதியில் துருப்புகள் குவிக்கப்பட்டு, உறவுகள் இரு நாடுகளுக்குமிடையே சீர்குலைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## கொங்கோவின் வடமேற்கு பகுதியில் புதியவகை வைரஸ்காய்ச்சலினால் 18 பேர் மரணம்; 160 பேர்வரை பாதிப்பு

கொங்கோவின் வடமேற்கு பகுதியில் எபோலா எனப்படும் வைரஸ் கிருமியின் தாக்கத்தினால், 18 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் 160 பேர்வரை தாக்கப்பட்டுள்ளதாகவும், கொங்கோ தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம், நிதியுதவி நிறுவனங்கள் கொங்கோ குடியரசின் சுகாதார அமைச்சு- நோய் மேலும் பரவாது தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

இந்நோய்க்கு இதுவரை மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவரின் உடலிலிருந்து வெளியேறும் நீரின் மூலம் மற்றவர்களுக்கு இந்நோய் தொற்றிக்கொள்கிறது. இறந்த பன்றியொன்றை சாப்பிட்ட வேட்டைக்காரர்களிடமிருந்தே இந்த நோய் பரவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஜோர்ஜியாவில் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் பாராளுமன்ற கட்டடத்தில் ஆர்ப்பாட்டம் செய்வதைக் காணலாம்.



பாக்தாத்தில் முள்ளுக்கம்பி ஒன்றை பாதைத்தடையாகப் பாவிப்பதற்கு தனது கைத்துப்பாக்கியால் அமெரிக்க சிப்பாய் ஒருவர் இழுத்துவருகின்றார்.

## ஊர்சுற்றி எழுதுவது

எல்லாளனுக்கும் துட்டகை முனுவுக்கும் நேரடிமோதல் நடந்தபோது, கிழவனான எல்லாளன் யானையில் இருந்து விழுந்துவிட்டான். அதுவே அவனது கடைசி வீழ்ச்சி. எழும்பவேயில்லை.

அந்தவீரனான எல்லாளனுக்கு போரில் வெற்றியீட்டிய துட்டகைமுனு உரியமரியாதை அளித்தான். எல்லாளனுடைய வீர உடலை தகுந்த அரசமரியாதை கொடுத்து, அடக்கம் செய்தான். அநுராதபுரத்தில் எல்லாளனின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் சமாதி கட்டினான். இப்பாதையால் வருவோர், போவோர் இந்தச் சமாதிக்கு மரியாதை செலுத்திச் செல்லவேண்டும் என கட்டளை பிறப்பித்தான். இதன்படி மக்களும் போரில் மாண்ட சுத்த வீரனான எல்லாள மன்னனுக்கு மரியாதை செலுத்தி வந்தனர்.

இது எனது சிறுவயதில் பள்ளிக்கூடப்பாடப்புத்தகத்தில் நான் படித்தது. பின்னர் இந்தப்பாடம் பள்ளிக்கூடப்பாடப்புத்தகத்தில் இருந்ததோ இல்லையோ எனக்கு தெரியவில்லை.

ஆனால், பின்னர் ஏன் இப்பொழுதும் தான் ஆங்கில (சிங்களத்திலும் வரலாம் எனக்குச் சிங்களம் தெரியாது) வாரப்பத்திரிகையிலும் சிறுவர் மலர் வெளியீடுகளிலும் துட்டகைமுனு எல்லாளன் வரலாறு சிறுகதையாக வெளிவந்தன, வெளிவருகின்றன. ஆனால் எல்லாளன் துட்டகைமுனுவுடன் போர்புரிந்து மாண்டான் என்பதுடன் கதையை முடித்து விடுகிறார்கள். அதன்பின் எல்லாளனை அடக்கம் செய்து சமாதிக்கு மரியாதை செய்ய மக்களை பணித்தது என்பதெல்லாம் மறைக்கப்பட்டது. இப்பொழுது அது மறக்கப்படுகிறது.

அரசியல் மேடைகளிலும், சிங்கள அரசியல் வாதிகள் துட்டகைமுனு எல்லாளன் வரலாறு பற்றியும், போர் பற்றியும் பேசுகிறார்கள், இனியும் பேசுவார்கள் ஆனால் எல்லாளனுக்கு இறுதியில் துட்டகை முனு சுத்தவீரனுக்கு கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுத்தான் என்பதை மறைத்து விடுகிறார்கள்.

எல்லாளனுக்கு சிங்கள மன்னான துட்டகைமுனு கொடுத்த மரியாதையையே மறந்தும், மறைத்தும் கேவலப்படுத்தும் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் சிங்களவரலாற்றாசிரியர்களும் தமது மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் உயிர் ஈந்த மாவீரர்களுக்கு தமிழர் தாயக மக்கள் ஆண்டில் ஒருதினத்தை ஒதுக்கி அஞ்சலி செலுத்துவதை புரிந்து கொள்ளமுடியுமா?

இவர்களாலேயே புரிந்துகொள்ள, உணர்ந்துகொள்ள முடியாது என்றால், சிங்களத்தில் நடக்கவும் ஓடவும், துப்பாக்கியைத்தூக்கவும், சுடவும் விடுக்கப்படும் பணிப்புரைகளை மட்டும் விளங்கிக்கொண்டால் போதும். என்று பயிற்சி எடுத்திருக்கும் படையினருக்கு, மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவது பற்றி என்ன புரியப்போகுது?

போரில் மாண்டுபோன பல படையினரின் சடலங்களை பொறுப்பெடுக்க மறுக்கும் படைத்தரப்பினர், எப்படி போரில் மாண்டவர்களுக்கு மரியாதை செலுத்த முனைவர்?

தேசத்தைப்பாதுகாக்கும் படைவீரர்கள் என்று, அறிக்கைகளிலும் படையினரின் கூட்டங்களிலும் சந்திரிகா அம்மையார் பேசுவார். ஆனால் அவருடைய ஆட்சியில்தான் போரில் மாண்ட படைவீரர் பலரின் உடல்களைப் பொறுப்பெடுக்க அரசு மறுத்தது என்பதை, மக்கள் அறியமாட்டார்கள்!

சிங்கள மக்களின் நாகரிகம் தன்மானம் கௌரவம் பற்றியெல்லாம் சமீபத்தில் ஒரு பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் பெருமையாக எழுதியிருந்தார். அரசியல்வாதிகளும் பெருமையாப் பேசுவார்.

சிங்கள மக்கள் நாகரிகமும், தன்மானமும், கருணையும் உள்ளவர்கள்தான் .ஆனால் அவற்றை இல்லாமல் செய்வது, ஊடகங்களும், அரசியல்வாதிகளும்தான் என்கிறார் நண்பர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

வழமையாக அதிகாலை எழுந்ததும் கந்தப்பு அம்மான் கடைக்கு முகங்கழுவாமலேயே ஒரு தேத்தண்ணீர் குடித்து உசார் ஏத்த வரும் கனகண்ணையை இன்னும் காணவில்லை. மணி காலை ஏழு எனக்காட்டியது.

இது ஒரு அதிசயந்தான் ஆளுக்கு ஏதாவது சுகமில்லையோ? மழை விட்டதும் பனிகொட்டத்தொடங்கிவிட்டது. ஆள் குளிரில் முடங்கி விட்டாரே...?

மணியத்தார் கனகரைக்காணாததால் கனக்க கற்பனை பண்ணத் தொடங்கிவிட்டார். 'ஒருவேளை இரவிரவா மாவீரர்நாளுக்கு கொடிகட்டி சிகரங்கட்டி குதித்துக் கொண்டிருந்தவரை ஆரும் ஆமிக்காரர் மிரட்டிப்போட்டினமோ...

'சீ... ஆள் அதுக்கெல்லாம் அசையிற ஆளே... அப்ப பின்ன ஆள் எங்க... இன்னமும் காணேல... காலையிலேயே கள்ளடிக்கப்போட்டாரே... சீ... என்னைவிட்டுட்டு இந்தக் குளிரிலை தனியப் போகமாட்டார்' மணியம் நல்லா குழம்பித்தான் போனார். சந்தியில் சோமண்ணார் கூதலக்கு சுறுட்டுக்குடித்து சூடேற்றிக்கொண்டிருந்தார்.

'சோமு... கனகரைக் கண்டனியே... காலையிலை இருந்து ஆளைக் காணேல... ' என்றார் மணியம்.

'அவர் வெள்ளன நேரத்தோட குளிச்சுப் போட்டு கோவிலுக்கு போனவர்...'

'என்னடா ஒருநாளும் இல்லாத திருநாளா இண்டைக்கு அவருக்கு ஒரு குளிப்பு... அதுவும் இந்தக் குளிருக்கை...'

'இண்டைக்கு அவற்றை மகன்ரை பிறந்த நாளாம் அதுதான் அர்ச்சனை செய்யப்போட்டார்...'

'அவருக்கு எங்கயடா மகன் இருக்கு... ஒரேயொரு மகள்தானே...!'

'உனக்கு இருளுறது விடியிறது தெரியிறேல... இண்டைக்கு எங்கடை பிரபாகரன்ரை பிறந்தநாளெல்லே... கனகர் 'என்ரை பெடியன்' எண்டெல்லே பிரபாகரனைச் சொல்லுறவர்...'

'மகளின்ரை பிறந்தநாளுக்கு மண்டிபோட்டுக் கூத்தாடியவர் மகன்ரை பிறந்தநாளுக்கு கோயிலுக்குப் போட்டாரோ... வரட்டும் வரட்டும்!'

-தெருவாசி

## ஆர்ப்பாட்டம் செய்தவர்கள்...

சந்திப்பதைத்தான் விரும்புகிறார்கள். நான் இவ்வளவு தூரம் இலங்கை வந்து,. அவரைச் சந்திக்காமல் இருந்தால் அவர் அதிர்ச்சி அடைந்திருப்பார்.

கிறிஸ்பற்றனிடம் கேட்கப்பட்ட கேள்விகள் சிலவும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு -

விடுதலைப் புலிகள் அமைப்பு பிரிட்டனில் இன்னமும் தடைசெய்யப்பட்டிருக்கும்போது, நீங்கள் பிரபாகரனைச் சந்திப்பது குறித்து என்ன கூறுகிறீர்கள்?

முக்கிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எட்டி, மோதல்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கங்களுடன் என் வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைக்குரியவர்களைச் சந்தித்திருக்கிறேன். பிரிட்டனுக்கு மிக அருகிலும் இத்தகையவர்களைச் சந்தித்திருக்கிறேன்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஏற்கனவே ஐரோப்பிய யூனியன் அமைச்சர்கள், அதிகாரிகளைச் சந்தித்திருக்கிறார்கள். எனவே இந்தச் சந்திப்பு புதிதல்ல. மாறாக இந்தச் சந்திப்பின் மூலமாக விடுதலைப் புலிகளின் தலைமைக்கு சர்வதேச சமூகத்தின் கருத்துக்களை எடுத்துக்கூறுவது எனது நோக்கம். விடுதலைப் புலிகளின் தலைவர் என்ன செய்யவேண்டுமென்று சர்வதேச சமூகம் எதிர்பார்க்கிறது என்பதை அவருக்கு எடுத்துக்கூறுவதே எனது நோக்கம்.

விடுதலைப் புலிகளின் கடுமையான நிலைப்பாடா அல்லது தற்போது தென்னிலங்கையில் நடந்துவரும் அரசியல் பலப்பரீட்சையா எது அமைதி வழிமுறையை மோசமாக அச்சுறுத்தி வருகிறது?

தற்போது கொழும்பில் நடந்துவரும் வாக்குவாதங்கள் அனைத்தும் விரைவில் பின்தள்ளப்படும் என்று நம்புகிறேன். அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இடையில் பரவலாக ஏற்படும் ஒரு கருத்தொற்றுமையின் அடிப்படையில் இனி அரசாங்கம் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும் என்று நம்புகிறேன்.

இதுவரை தென்னிலங்கையில் ஆட்சியிலிருந்த கட்சிகள் மாறி மாறி பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கின்றன. இனி அப்படியல்ல. அவர்கள் ஒரே சமயத்தில் பேசவேண்டும். அப்படியே பேசுவார்கள் என்று நம்புகிறேன். அப்போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேசுவது எளிதாகும். அவர்களிடம் கடுமையான, அறிவார்ந்த விடயங்களை முன்வைப்பது எளிதாகும்.

கடந்த ஏப்ரல் மாதம் ரோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு ஐரோப்பிய யூனியன் நிறைய நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்திருந்தது. இப்போது அமைதி வழிமுறை முடக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நிதியுதவி செலவிடப்படுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ரோக்கியோ மாநாட்டை இணைந்து நடத்தியதில் எமக்கு முக்கிய பங்குண்டு. அங்கே இலங்கைக்கு கடன் அல்லாத நிறைய நிதியுதவி அளிக்க உறுதிகூறியிருந்தோம். அதைச் செலவிடவே நாங்கள் விரும்புகிறோம். இலங்கையின் வாணிபத் தொடர்புகளாலும் இருதரப்பு ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் புதிய முன்முயற்சிகளை எடுக்க நாங்கள் விரும்புகிறோம். அதுபற்றி இந்த வாரம் அரசிடம் பேசவிருக்கிறோம். அதேநேரம் அமைதிப்பாதை செயற்படவில்லையாயின் அதை நம்பிச் செலவழிக்கமுடியாது. எனவே, அமைதிப் பாதை செயற்படுமென நான் நம்புகிறேன். அப்போதுதான் தாமதமின்றி விரைவில் நாங்கள் ஒதுக்கிய நிதியைச் செலவிட முடியுமென நான் சுட்டிக்காட்டியாக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### இன்று பிரபாவை...

இதேவேளை, நேற்று கொழும்பு வந்த கிறிஸ் பற்றன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் குறித்து ஆராயப்பட்டதாகவும், இன்று பிரபாகரனுடனான சந்திப்பில் கலந்துரையாடவுள்ள விடயங்கள் குறித்து கிறிஸ் பற்றன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விளக்கிக்கூறியதாகவும் தெரியவருகிறது.

மேலும் தெரிவுசெய்யப்பட்ட சில அரசியற் தலைவர்களையும், கிறிஸ் பற்றன் சந்தித்தார். எனினும் கூட்டமைப்பு தலைவர்கள் எவரையும் அவர் சந்திக்கவில்லை.

அமைச்சர் பீரிஸ், ரவூப் ஹக்கீம், மிலிந்த மொறகொடவும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

மஹஜன சம்பத
பெறுபேறுகள்
சீட்டிழுப்பு இல: 1567 திகதி: 25.11.2003
வெற்றி இலக்கங்கள்
V 3 7 5 3 4 3

# 1995 ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த
# 12 மாவீரர்களின் வித்துடல்கள் இன்று விதைக்கப்படவுள்ளன!

யாழ்.குடாநாடு இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருந்த வேளையில் ஏற்பட்ட நேரடி மோதல்களில் வீரச்சாவடைந்த 12 மாவீரர்களின் வித்துடல்கள் இன்று துயிலும் இல்லங்களில் விதைக்கப்படவுள்ளன.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வுக்குப் பின்னர் குடாநாட்டில் தங்கியிருந்த போராளிகள் பலர் இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு இலக்காகி வீரச்சாவடைந்திருந்தனர். இவர்களில் சிலரது வித்துடல்கள் போராளிகளால் இரகசியமாக பாதுகாப்பான இடங்களில் விதைக்கப்பட்டிருந்தன.

தற்போது ஏற்பட்ட சமாதான சூழலுக்குப் பின்னர் இவ்வித்துடல்கள் வன்னிக்கு அனுப்பப்பட்டு, மீண்டும் நேற்று யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டன. இன்று அவை துயிலுமில்லங்களில் விதைக்கப்படும் என யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் தெரிவித்தனர்.

வடமராட்சியைச் சேர்ந்த மாவீரர்களான கப்டன் பவுளரசன் (கதிரவேலு கதிரபாலன், கரணவாய் தெற்கு), மேஜர் அருட்செல்வன் (கணபதிப்பிள்ளை கருணாகரன், கரணவாய் தெற்கு), லெப்.சோளவளநாடன் (நாகரட்ணம் பாலநேசன், கரணவாய் தெற்கு) ஆகியோரின் வித்துடல்கள் வடமராட்சியில் அமைந்துள்ள எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும்-

வலிகாமத்தைச் சேர்ந்த மாவீரர்களான கப்டன் கண்ணன் அல்லது பாரிஸ் (கதிரவேலு பத்மசீலன், கற்புலம் வீதி, உரும்பிராய்), கப்டன் செல்வன் அல்லது செல்வா (மார்க்கண்டு கோபாலகிருஸ்ணன், வசந்தபுரம் சேந்தான்குளம், தெல்லிப்பளை,) கப்டன் அன்பழகன் (சிவசம்பு சிவகுமார், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்), லெப்.முத்து அல்லது முத்துக்குமரன் (வேலாயுதம் பாலகன், கட்டுடை மானிப்பாய்) ஆகியோரின் வித்துடல்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும்

தென்மராட்சியைச் சேர்ந்த மாவீரர்களான லெப்.ஆண்டான் அல்லது தாசன் (சண்முகம் இராசரட்ணம், மட்டுவில் வடக்கு), லெப்.மலையப்பன் அல்லது ஈசன் (சிவராசா மனோகரன், கெருடாவில் சாவகச்சேரி)

லெப்.வேலவேந்தன் (தெட்சனாமூர்த்தி மகேஸ்வரன், சங்கத்தானை சாவகச்சேரி), மேஜர் வெற்றிச்செல்வன் அல்லது ஜெயா (மரியநாயகம் லோரண்ஸ், கிளாலி எழுதுமட்டுவாழ்), (முன்னாள் தென்மராட்சிப் பொறுப்பாளர்), கப்டன் விபுலன் அல்லது பதுமன் (கனகசுந்தரம் பாலகுமார், அல்லாரை வடக்கு,) கொடிகாமம் ஆகியோரின் வித்துடல்கள் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் விதைக்கப்படவுள்ளன.(ச)

### குடாநாட்டில் மாவீரர்...

அத்தியட்சகர் குலதுங்க பொலிஸ் தலைமையிலான உயர் அதிகாரி ஆனந்த செனவிரட்ன, போக்குவரத்துப் பொறுப்பதிகாரி ஜவ்பர் ஆகியோர் கலந்துகொண்டனர். கண்காணிப்புக் குழுவில், யாழ். மாவட்ட பிரதம கண்காணிப்பாளர்கரினா எரிக்ஷன் பிரசன்னமாகியிருந்தார்.

இந்த சந்திப்பில் மாவீரர் தின நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு படையினர் நெருக்கடிகளை ஏற்படுத்திக்கொள்கின்றனர். இந்த விடயம் தொடர்பாக அண்மையில் கலந்துரையாடியபோது படையினர் நெருக்கடிகளை ஏற்படுத்த மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தற்போதும் படையினர் மாவீரர் நாள் நிகழ்வுகளை மக்கள் முன்னெடுத்துச் செல்வதற்கு இடையூறாக இருக்கின்றனர். என விடுதலைப் புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

மாவீரர்தின நிகழ்வுகளை நடத்த இடையூறாக இருக்கமாட்டார்கள் என்றும்,பிச்சினை ஏற்படுத்தும் நோக்கம் தமக்கு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் நிகழ்வுகளில் புலிக்கொடி ஏற்றுவதற்கும்,வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாக வீதி வளைவுகளை அமைப்பதற்கும் அனுமதிக்கமுடியாது.

எனினும் மாவீரர் சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகளை ஏற்றுவதற்கு அனுமதிக்கலாம் என்றும் இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான மாவீரர்தின நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படும் என அரசிற்துறைதுணைப் பொறுப்பாளர் செம்மணண் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார். (202)

### புலிகளின் குரல் சேவை விஸ்தரிப்பு

தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்ததினத்தை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்குமுகமாக புலிகளின் குரல் இன்று அதிகாலை 5 மணியிலிருந்து இரவு பத்து மணி வரை தனது சேவையினை நீடித்துள்ளது.

எனவே தேசியத் தலைவருக்கு வாழ்த்துத் தெரிவிக்க விரும்புவோர் 021-222-5702 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கலாமென புலிகளின்குரல் சேவை அறிவித்துள்ளது.

### யாழ்ப்பாணக்...

குடாநாட்டில் மாவீரர்தின நினைவுப் பதாகைகள், வளைவுகளை படையினர் அகற்றியதைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை அடுத்தே மேலதிக கண்காணிப்பாளர்களை அனுப்பவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதென அவர் மேலும் தெரிவித்தார்.

TYPEWRITING AND SHORTHAND CLASSES FOR NEW BATCHES

These classes are commencing on Saturday, 6th December 2003 at 9.00 A.M at our Typing Centre, at 68, Clock Tower Road, Jaffna.

Those who are interested to follow these classes are requested to effect their registrations from 1st December 2003.

Please note that after completion of their course they will also receive training in the Computer on 'Word Processing'.

Director

INSTITUTE OF INFORMATICS STUDIES
68, Clock Tower Road, Jaffna. (சி-1822)



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை ஐரோப்பிய யூனியன் ஆணையாளர் கிறிஸ்பற்றன் நேற்று சந்தித்து கலந்துரையாடியதைக் காணலாம்.

### தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும்...

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களிலும் பொது இடங்கள், அரசியற் பணிமனைகள், பாசறைகள், பணிமனைகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகி நடைபெற்றன.

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலுமில்லத்தில் மூத்த தளபதி கேணல் கருணா அம்மானும், தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் ஜெயந்தன் படையணி தளபதி ராம், மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் கோட்ட படைத்துறைப் பொறுப்பாளர் பவானும், அம்பாறை கஞ்சிகுடிச்சாறு துயிலுமில்லத்தில் உமராமும், தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தனர்.

கோப்பாய் மாவீ ரர் துயிலும் இல்லத்தில் பொதுச்சுடரினை மாவீரர் தமிழ்ச்செல்வன், சுருளி ஆகியோரின் அன்னையர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் கயல்விழி ஏற்றிவைத்தார். தொடர்ந்து வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை - மாவீரர் நாள் ஆரம்பநிகழ்வுகள் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்திலும் நடைபெற்றது. பொதுச்சுடரினை மாவீரர் பல்லவியின் சகோதரி ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைத்தார்.

தென்மராட்சி மாவீரர் துயிலுமில்லத்தில் தென்மராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் - பொதுச்சுடரினை தளபதி தீபன், வர்த்தகப் பிரமுகர் அருளம்பலம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை தளபதி மகேந்தி ஏற்றிவைத்தார்.

மணலாறு இதயபூமி துயிலுமில்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் - மணலாறு கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த தாக்குதல் தளபதிகளில் ஒருவரான சத்தியா பொதுச்சுடரை ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை மணலாறு கட்டளைப் பணியகத் தளபதி உருத்திராங்கன் ஏற்றிவைத்தார்.

மணலாறு நிகான் துயிலுமில்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் இம்ரான் - பாண்டியன் படையணிப் பொறுப்பாளர்களில் ஒருவரான ராஜேஸ் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை படைத்துறை துணைப் பொறுப்பாளர் எழில்வாணன் ஏற்றிவைத்தார்.

மணலாறு புனிதபூமி துயிலுமில்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் - மணலாறு கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த பொறுப்பாளர்களில் ஒருவரான நந்தன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை சிறப்பு படையணியைச் சேர்ந்த பொறுப்பாளர்களில் ஒருவரான தயாதாஸ் ஏற்றிவைத்தார். கிளிநொச்சி, திருவையாறு மாவீரா மண்டபத்தில் சாள்ஸ் அன்ரனிப் படையணிப் போராளி பார்த்தீபன் தலைமையில் நேற்றுக் காலை ஆரம்பமான நிகழ்வில் - பொதுச் சுடரினை படையணித் தளபதி லெப்.கேணல் கோபி ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை படையணி சிறப்புத்தளபதி நகுலன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து, மாவீரர்களுக்கான பொது ஈகச்சுடரினை மாவீரர் லெப்.ஆருரானின் சகோதரி பத்மகலா மற்றும் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் முத்தழகி ஆகியோர் ஏற்றிவைத்தனர். மலர்மாலையை போராளி தீபன் அணிவித்ததைத் தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது. நினைவுரையினை போராளி அமிர்தாப் நிகழ்த்தினார்.

புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில் இம்ரான் - பாண்டியன் படையணி போராளி தனேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில்- பொதுச்சுடரினை படைத் தொடக்கப் பயிற்சிக் கல்லூரியில் கேணல் பால்ராஜ், தமிழீழத் தேசியக் கொடியினை சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி கேணல் சொர்ணம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து முதல் மாவீரன் லெப்.சங்கரின் திருவுருவப் படத்திற்கு தளபதி பிரசாத் மலர்மாலை அணிவித்து சுடர் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து இம்ரான், பாண்டியன் மாவீரர்களின் திருவுருவப் படத்திற்கு இம்ரானின் சகோதரர் சுரேஸ் மலர்மாலை அணிவித்து சுடரேற்றிவைத்தார்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.